7

APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE

AN

# LEMENTARY GRAMMAR

OF THE

## TAMIL TONGUE — II

### FIRST FORM

BY

C. R. NAMASIVAYA MUDALIAR,

*Lecturer in Tamil, Queen Mary's College, Madras*

MADRAS:

ASAWMY NAIDU & SONS

21

[Price, 4½ As.

# சிற்றிலக்கணம் - II

மேரி மகாராணியார் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும்
'நல்லாசிரியன்' பத்திராதிபரும் ஆகிய
**கா. நமச்சிவாய முதலியார்**
எழுதியது

சென்னை:
**ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்**
1921

ரெஜிஸ்தர் செய்தது]  [விலை 4 அணா 6 பை

# முன்னுரை

சிற்றிலக்கணம் இரண்டாம் பாகமாகிய இந்நூல், முதற் பதிப்பில், முதல் இரண்டு மூன்று பாரங்களுக்கு ஒன்றாகச் சேர்ந்திருந்தது. அதில் இன்ன பாரத்திற்கு இன்ன இயலென்று வெவ்வேறாக வகுத்துக் காட்டப்பட்டிருந்தது. இப்போது வழங்கும் 'பொது மத்திய முறை' (Concentric Method) என்னும் சிறந்த போதனை முறையைப் பற்றி ஒவ்வொரு வகுப்பிற்கும் எல்லா இயலும் அமையுமாறு படிப்படியாக உயர்த்தி ஒவ்வொரு வகுப்பிற்கு ஒவ்வொரு புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளன. வகுப்பை நோக்கி ஆங்காங்கே செய்துள்ள சிற்சில மாறுபாடுகளை அறிஞர்கள் மேற்கொள்வார்கள் என்று நம்புகின்றேன்.

கா. நம.

# சிற்றிலக்கணம் - II

## I - எழுத்து

இலக்கணம் என்பது பாஷையைத் திருத்தமாகப் பேசவும் எழுதவும் கற்பிக்கும் நூலாம்.

2. தமிழ் இலக்கணம் என்பது தமிழ்ப் பாஷையைத் திருத்தமாகப் பேசவும் எழுதவும் கற்பிக்கும் நூலாம்.

3. பாஷைக்கு ஒலி வடிவு என்றும் வரி வடிவு என்றும் இரண்டு வடிவங்கள் உண்டு.

4. பேசுவது ஒலி வடிவாம்; எழுதுவது வரி வடிவாம்.

5. ஒலியின் வரி வடிவே எழுத்தாகும். அது, எழுதப்படுவதால் எழுத்து எனப்படும்.

6. தமிழ்ப் பாஷையின் எழுத்துக்கள் நான்கு வகையாம். அவை,

1. உயிர் எழுத்து, 3. உயிர்-மெய் எழுத்து,
2 மெய் எழுத்து, 4. ஆய்த எழுத்து

என்பனவாம்.

# 1. உயிர் எழுத்து

**7.** மற்றோர் எழுத்தின் உதவி யின்றித் தானே ஒலிக்கவல்ல எழுத்து உயிர் எழுத்தாம். உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு. அவை —

அ-ஆ, இ-ஈ, உ-ஊ, எ-ஏ, ஐ, ஒ-ஓ, ஔ என்பனவாம்.

[பன்னிரண்டு உயிர் எழுத்துக்களில் சில குறுகிய ஓசை யுடையன, சில நீண்ட ஓசை யுடையன.]

**8.** குறுகிய ஓசை யுடைய எழுத்துக்கள் குறில் அல்லது குற்றெழுத்து எனப்படும்.

அ, இ, உ, எ, ஒ எனக் குறில் ஐந்தாம்.

**9.** நீண்ட ஓசை யுடைய எழுத்துக்கள் நெடில் அல்லது நெட்டெழுத்து எனப்படும்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என நெடில் ஏழாம்.

**10.** அ, இ, உ ஆகிய மூன்று எழுத்துக்களும் ஒரு பொருளைச் சுட்டிக் காட்டும்பொழுது மாத்திரம் சுட்டெழுத்து எனப்படும்.

| | | |
|---|---|---|
| அவன் | இவன் | உவன் |
| அம் மனிதன் | இப் பலகை | உவ் வீடு |
| அந்த மனிதன் | இந்தப் பலகை | உந்த வீடு |

[சுட்டு எழுத்து=குறித்துக் காட்டும் எழுத்து. உலக வழக்கில் உகரம் சுட்டாக வருவ தில்லை. அ என்பது அந்த என்றும், இ என்பது இந்த என்றும், உ என்பது உந்த என்றும் திரிந்து வரும்.]

**11.** ஆ, எ, ஏ, ஓ, யா ஆகிய ஐந்து எழுத்துக்களும் வினவை உணர்த்தும்போது மாத்திரம் வினு எழுத்து எனப்படும். இவற்றுள்,

(1) எ, ஏ, யா இந்த மூன்று எழுத்துக்களும் மொழிக்கு முதலில் நின்று வினாவை உணர்த்தும்.

| | | | |
|---|---|---|---|
| எ —— | எவன்? | எது? | என்ன? |
| ஏ —— | ஏது? | ஏன்? | ஏவன்? |
| யா —— | யாவை? | யாது? | யார்? |

[எ என்பது எந்த எனத் திரிந்து வரும்.]

(2) ஆ, ஓ, இந்த இரண்டு எழுத்துக்களும் மொழிக்கு ஈற்றில் நின்று வினாவாகும்.

| | | | |
|---|---|---|---|
| ஆ —— | அவனா? | அதுவா? | நானா? |
| ஓ —— | அவனோ? | அதுவோ? | நானோ? |

## பயிற்சி — I.

கீழ் வரும் வாக்கியங்களி லுள்ள உயிர் எழுத்துக்களை அடியிற் காட்டிய வீடுகளில் அமைத்து எழுது.

1. இன்று இரவு வந்தவன் அரங்கனா?
2. ஆராயாமல் உரைத்தல் தனக்கே கெடுதி அன்றோ?
3. ஈசுவரன் எண்ணம்போல் எல்லாம் ஆகும்.
4. என்ன சொன்னாலும் ஈனனுக்குப் புத்தி ஏது?
5. ஓடினவனுக்கு ஒன்பதாம் இடத்தில் குரு.
6. ஏற விட்டு ஏணியை எடுக்கலாமோ?
7. ஔவையார் வாக்கோ அமுத வாக்கு.
8. ஐயர் இல்லை என்று அமாவாசை நிற்குமா?
9. அடைந்தவனை ஆதரித்தல் அறிவோர்க்கு அழகு.
10. ஊரார் உடைமைக்குப் பேயாய்ப் பறப்பதா?

| எண் | சொல் | குறில் | நெடில் | சுட்டு | வினா |
|---|---|---|---|---|---|
| 1 | இன்று | இ | — | இ | — |
| | | | | | |

## 2. மெய் எழுத்து

**12.** உயிரெழுத்தின் உதவி யின்றி ஒலிக்காதது எழுத்து மெய் யெழுத்தாம். மெய் யெழுத்துக்கள் பதினெட்டு. அவை,

க்-ங், ச்-ஞ், ட்-ண், த்-ந், ப்-ம், ய், ர், ல், வ், ழ், ள், ற்-ன் என்பனவாம்.

**13.** பதினெட்டு மெய்யெழுத்துக்களும் மூன்று இனமாகப் பிரிக்கபபடும். அவை,

(1) வல்லினம் — க், ச், ட், த், ப், ற் என ஆறும்.

(2) மெல்லினம் — ங், ஞ், ண், ந், ம், ன் என ஆறும்.

(3) இடையினம் — ய், ர், ல், வ், ழ், ள் என ஆறும்.

## 3. உயிர் - மெய் எழுத்து

**14.** உயிரும் மெய்யும் கூடிப் பிறக்கும் எழுத்து உயிர் - மேய் எழுத் தாம். உயிர் - மெய் எழுத்துக்கள் இருநூற்றுப் பதினாறு. அவை வருமாறு :

ஒரு மெய்யின்மேல் 12 உயிர்களும் ஏறுவதனல் 12 உயிர்-மெய் எழுத்துக்க ளுண்டாகும். அவ்வாறே, 18 மெய்-களின் மேலும் 12 உயிர்களும் தனித் தனி ஏறுவதனல் (18 × 12 =) 216 உயிர்-மெய் எழுத்துக்கள் உண்டாகும். (இதன் விவரத்தை 6 ஆம் பக்கத்தில் பார்க்க.) உயிர் - மெய் எழுத்தில் மெய் முன்னும், உயிர் பின்னும் ஒலிக்கும்.

| | | |
|---|---|---|
| க் + அ = க | க் + உ = கு | க் + ஐ = கை |
| க் + ஆ = கா | க் + ஊ = கூ | க் + ஒ = கொ |
| க் + இ = கி | க் + எ = கெ | க் + ஓ = கோ |
| க் + ஈ = கீ | க் + ஏ = கே | க் + ஔ = கௌ |

## 4. ஆய்த எழுத்து

**15.** மூன்று புள்ளி வடிவமா யுள்ளது ஆய்த எழுத் தாம். எஃகு, அஃது, இஃது.

பயிற்சி — 2.

I. உயிர்-மெய் எழுத்துக்களை எழுது.

| | |
|---|---|
| ம் + அ = | ன் + ஒ = |
| ய் + இ = | ப் + ஊ = |
| ச் + ஐ = | வ் + ஆ = |
| த் + உ = | ந் + ஈ = |
| ம் + ஔ = | ண் + எ = |
| ல் + ஏ = | ட் + ஓ = |

II. உயிரையும் மெய்யையும் பிரித்துக் காட்டு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | ம | ப | த | பா | செ |
| ரு | து | ழ | ணி | லா | னே |
| ம | ரை | னி | கை | று | ந |
| யி | நா | வ | ப | கி | க |
| லே | டு | ரை | தி | ளோ | ரி |

III. கீழ்வரும் மெய் எழுத்துக்களை அடியிற் காட்டிய வீடு-களில் அமைத்து எழுது.

1. வீட்டில் நாள்தோறும் பாடங்களைப் படி.
2. பஞ்சைக் கட்டுக்கட்டி ஏற்றுமதி செய்வார்கள்.
3. மெய் பேசி வாழ்வதே உத்தமம் என்பர் மேலோர்.
4. கந்தன் தன் எண்ணம்போல் நடக்கிறுன்.
5. எவ்விடத்தில் இந்தப் பொருள் கிடைக்கும்?

| எண் | சொல் | வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|---|---|
| | | | | |

# உயிர் - மெய் எழுத்துக்கள் — 216.

| மெய் உயிர் | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் + | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் + | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் + | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் + | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் + | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் + | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் + | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் + | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் + | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் + | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் + | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் + | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் + | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் + | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் + | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் + | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் + | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் + | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

## உயிர்-மெய்க் குறில் 90 + உயிர்-மெய் நெடில் 126=216

| அ | இ | உ | எ | ஒ | ஆ | ஈ | ஊ | ஏ | ஐ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | கி | கு | கெ | கொ | கா | கீ | கூ | கே | கை | கோ | கௌ |
| ங | ஙி | ஙு | ஙெ | ஙொ | ஙா | ஙீ | ஙூ | ஙே | ஙை | ஙோ | ஙௌ |
| ச | சி | சு | செ | சொ | சா | சீ | சூ | சே | சை | சோ | சௌ |
| ஞ | ஞி | ஞு | ஞெ | ஞொ | ஞா | ஞீ | ஞூ | ஞே | ஞை | ஞோ | ஞௌ |
| ட | டி | டு | டெ | டொ | டா | டீ | டூ | டே | டை | டோ | டௌ |
| ண | ணி | ணு | ணெ | ணொ | ணா | ணீ | ணூ | ணே | ணை | ணோ | ணௌ |
| த | தி | து | தெ | தொ | தா | தீ | தூ | தே | தை | தோ | தௌ |
| ந | நி | நு | நெ | நொ | நா | நீ | நூ | நே | நை | நோ | நௌ |
| ப | பி | பு | பெ | பொ | பா | பீ | பூ | பே | பை | போ | பௌ |
| ம | மி | மு | மெ | மொ | மா | மீ | மூ | மே | மை | மோ | மௌ |
| ய | யி | யு | யெ | யொ | யா | யீ | யூ | யே | யை | யோ | யௌ |
| ர | ரி | ரு | ரெ | ரொ | ரா | ரீ | ரூ | ரே | ரை | ரோ | ரௌ |
| ல | லி | லு | லெ | லொ | லா | லீ | லூ | லே | லை | லோ | லௌ |
| வ | வி | வு | வெ | வொ | வா | வீ | வூ | வே | வை | வோ | வௌ |
| ழ | ழி | ழு | ழெ | ழொ | ழா | ழீ | ழூ | ழே | ழை | ழோ | ழௌ |
| ள | ளி | ளு | ளெ | ளொ | ளா | ளீ | ளூ | ளே | ளை | ளோ | ளௌ |
| ற | றி | று | றெ | றொ | றா | றீ | றூ | றே | றை | றோ | றௌ |
| ன | னி | னு | னெ | னொ | னா | னீ | னூ | னே | னை | னோ | னௌ |

# II—சொல்

எழுத்துக்கள் தனித்தாயினும், இரண்டு முதலாகத் தொடர்ந்தாயினும் நின்று ஒரு பொருளை உணர்த்துவது சொல் எனப்படும்.

(1) ஓர் எழுத்தால் ஆன சொற்கள்,

| | | | | |
|---|---|---|---|---|
| ஈ | தா | தை | பூ | போ |
| கை | தீ | நீ | பை | மை |

(2) இரண்டு முதலான எழுத்துக்களால் ஆன சொற்கள்.

| | | |
|---|---|---|
| கதை | ஆடு | வீணை |
| மரம் | விரல் | பட்டு |
| கப்பல் | பட்டம் | அனுப்பு |
| பட்டணம் | புத்தகம் | வருகிறது |

## 1. சொற்கள்

**2.** தமிழ்ப் பாஷையின் சொற்கள் நான்கு வகைப்படும். அவை,

1. பெயர்ச் சொல்,
2. வினைச் சொல்,
3. இடைச் சொல்,
4. உரிச் சொல் என்பனவாம்.

**3**. பொருளின் பெயரை உணர்த்துவது பெயர்ச் சொல்லாம்.

மனிதன் வீடு பசு வெண்மை

**4**. பொருளின் தொழிலை உணர்த்துவது வினைச் சொல்லாம்.

இராமன் படிக்கிறன். நாய் குரைக்கிறது.
பட்சி பறக்கிறது. காற்று வீசுகிறது.

5. பெயர் வினைகளை யடுத்து இடையில் வரும் சொல் இடைச் சொல்லாம்.

இராமனும் முருகனும் போனார்கள் (உம்)
அவன் வந்தானும், ஆனால், நான் காணவில்லை (ஆனால்)
ஐயோ ! என் புத்தகத்தை இழந்தேனே (ஐயோ, ஏ)

6. பெயர் வினைகளின் குணத்தைக் காட்ட வரும் சொல் உரிச் சொல்லாம்.

பெயர் உரி — கழி பொருள் நனி பேதை
வினை உரி — சாலப் பேசினான் ; நனி தின்றான்.

7. தமிழ்ச் சொற்களோடு வேறு பாஷையின் சொற்களும் வந்து வழங்கி வருகின்றன. அவை, வடசொல், திசைச் சொல் என இருவகைப்படும்.

## 2. வட சொல்

8. ஸம்ஸ்கிருத பாஷையின் சொற்கள் தமிழில் வந்து வழங்குவது வட சொல் எனப்படும்.

| வட சொல். | | தமிழ்ச் சொல். |
|---|---|---|
| குஞ்சரம் | ——— | யானை |
| பங்கஜம் | ——— | தாமரை |
| ஸர்ப்பம் | ——— | பாம்பு |

## 3. திசைச் சொல்

9. ஸம்ஸ்கிருதம் நீங்க மற்றப் பாஷைகளின் சொற்கள் தமிழில் வந்து வழங்குவது திசைச் சொல் எனப்படும்.

| திசைச் சொல். | | தமிழ்ச் சொல். |
|---|---|---|
| அந்தோ (சிங்களச் சொல்) | ——— | ஐயோ |
| பென்ஸில் (அங்கிலச் சொல்) | ——— | எழுதுகோல் |
| ஸலாம் (இந்துஸ்தானிச் சொல்) | ——— | வணக்கம் |

## 4. வழக்கு

**10**. உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வழங்குவது வழக்காம். அது, இயல்பு வழக்கு என்றும், தகுதி வழக்கு என்றும் இருவகைப்படும்.

### (1) இயல்பு வழக்கு

**11**. இயல்பு வழக்கு மூன்று வகைப்படும். அவை — (1) இலக்கணமுடையது, (2) இலக்கணப் போலி, (3) மரூஉ என்பனவாம்.

**12** சொற்கள் இலக்கண அமைதியாய் அமைந்து வருவது இலக்கணமுடையதாம்.

நான் போனேன். அவன் படிக்கிறான்.

**13**. இலக்கண அமைதியான சொற்கள் முன் பின்னாக மாறிநிற்பது இலக்கணப்போலியாம்.

புறநகர் —— நகர்ப் - புறம் என்பது மாறிற்று.
புறக் கடை —— கடைப் - புறம் என்பது மாறிற்று.

**14**. சொற்கள் இலக்கண அமைதி கெட்டுவருவது மரூஉவாம்.

அருமந்த பிள்ளை —— (அரு மருந் தன்ன பிள்ளை)
அமக்களம் —— (அமர்க் களம்)

### (2) தகுதி வழக்கு

**15**. தகுதி வழக்கு மூன்று வகைப்படும். அவை, (1) இடக்கரடக்கல், (2) மங்கலம், (3) குழூஉக் குறி என்பனவாம்.

**16**. சொல்லத் தகாததை மறைத்துச் சொல்வது இடக்கரடக்கலாம்.

கால் கழுவி வந்தேன்.
ஒன்றுக்குப் போனான்.

**17**. அமங்கலத்தை மங்கலமாகச் சொல்வது மங்கலமாம்.

நன் காடு —— (சுடு காடு)
துஞ்சினான் —— (இறந்தான்)

**18**. ஒரு கூட்டத்தார் ஒரு பொருளுக்குக் குறிப்பாக இட்டு வழங்கும் பெயர் குழூஉக்குறியாம்.

சொல்விளம்பி —— (கள்)
மதிவெள்ளை —— (ஒரு ரூபாய்)

## பயிற்சி — 3.

I. விடை சொல்லு :

1. சொல் என்பது என்ன? 2. ஓர் எழுத்து மொழிகள் எவை? 3. தமிழ்ப் பாஷையின் சொற்கள் எவை? அவை ஒவ்வொன்றையும் விவரி. 4 வட சொல், திசைச் சொல் என்பன யாவை? உதாரணங்கொடு. 5. வழக்கு என்பது என்ன? ஒவ்வொரு பிரிவையும் சொல்லி, உதாரணங்கொடு.

II. கீழ் வரும் சொற்களை அடியிற் காட்டிய வீட்டிற் பொருத்து :

1. நாம் எப்பொழுதும் நன்மை செய்ய முயலவேண்டும்.
2. இஷ்டமானால் எல்லோரும் இங்கிலிஷ் வாசிக்கலாம்.
3. தாசீல்தார் வயல்களைச் சுற்றிப் பார்த்து வருகிறார்.
4. நுனி மரத்தில் பழங்கள் குலையாய் இருக்கின்றன.
5. வெள்ளாடு தழைகளைத் தின்னப் பிரியப்படும்.
6. சால வுழைத்தும் கூலி கிடைக்க வில்லையே.

| எண் | பெயர் | வினை | இடை | உரி | வட சொல் | திசைச் சொல் | வழக்கின் வகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

# 1. பெயர் இயல்

**19.** பொருளின் பெயரைக் காட்டுவது பெயர்ச் சொல்லாம்.

| | | |
|---|---|---|
| இராமன் | சித்திரை | வெண்மை |
| சென்னை | கண் | செய்கை |

(1) போதுப் பேயர் - சிறப்புப் பேயர்கள்.

**20.** பெயர்ச் சொற்கள் போதுபபேயர், சிறப்புப் பேயர் என இருவகைப்படும்.

**21.** பல பொருள்களுக்குப் பொதுவாய் வரும் பெயர் போதுப் பேயராம்.

மரம் — (பொதுவில் மரங்களை உணர்த்தும்.)
மிருகம் — (பொதுவில் மிருகங்களை உணர்த்தும்.)
தேசம் — (பொதுவில் தேசங்களை உணர்த்தும்.)

**22.** ஒருவகைப் பொருளையே உணர்த்தும் பெயர் சிறப்புப் பேயராம.

தென்னை — (ஒருவகை மரத்தையே உணர்த்தும்.)
எருது — (ஒருவகை மிருகத்தையே உணர்த்தும்.)
இந்தியா — (ஒரு தேசத்தையே உணர்த்தும்.)

(2) பல வகைப் பேயர்ச் சோற்கள்.

**23.** பெயர்ச்சொல் பலவகைப்படும். அவை,

1. பொருட் பெயர்,
2. இடப் பெயர்,
3. காலப் பெயர்,
4. சினைப் பெயர்,
5. பண்புப் பெயர்,
6. தொழிற் பெயர்,
7. வினையாலணையும் பெயர்,
8. சுட்டுப் பெயர்,
9. வினாப் பெயர்,
10. கிளைப் பெயர்,
11. சாதிப் பெயர்,
12. அளவுப் யெயர்,
13. தன்மைப் பெயர்,
14. முன்னிலைப் பெயர்,
15. படர்க்கைப் பெயர்,
16. போதுப் பெயர்,
17. ஆகு பெயர் முதலிய[ன.

**24.** பிராணிகளின் பெயரை அல்லது பொருள்களின் பெயரைக் காட்டுவது பொருட் பெயராம்.

மனிதன் மரம் யானை கல்

**25.** இடங்களின் பெயரைக் காட்டுவது இடப் பெயராம்.

தேசம் கிராமம் காடு வீடு

**26** காலங்களின் பெயரைக் காட்டுவது காலப் பெயராம்.

நாள் சனி ஆவணி வருஷம்

**27.** உறுப்புக்களின் பெயரைக் காட்டுவது சினைப் பெயராம். (சினை = உறுப்பு.)

கை தலை கண் கிளை

**28.** குணம் அல்லது நிறத்தின் பெயரைக் காட்டு-வது பண்புப் பெயராம். (குணம் = பண்பு.)

செம்மை நன்றி நலம் வெண்மை

**29.** தொழிலின் பெயரைக் காட்டுவது தொழிற் பெயராம்.

நடத்தல் வருகை செய்கை செலவு

**30.** சில வினைமுற்றுக்கள் பெயர்ச் சொல்லின் தன்மையடைந்து வேற்றுமையுருபேற நிற்பதுண்டு; அவை வினையாலணையும் பெயர் எனப்படும்.

படித்தானைக் கண்டேன்.
படித்தவனுக்குப் புகழ் உண்டு.

'அவன் படித்தான்' என்பதில் படித்தான் என்பது தொழிலைக் காட்டுகிறது; 'படித்தானைக் கண்டேன்' என-பதில் படித்தான் என்பது படித்தமனிதனைக் காட்டுகிறது; படித்தமனிதன் என்று அர்த்தங் கொடுக்கும்போது அது வினையாலணையும் பெயராகும்.

**31.** அ, இ, உ என்னும் சுட்டெழுத்தின் அடி-யாகப் பிறக்கும் பெயர் சுட்டுப் பெயராம்.

| | | |
|---|---|---|
| அ — அவன் | இ — இவன் | உ — உவன் |
| அவள் | இவள் | உவள் |
| அவர் | இவர் | உவர் |
| அவர்கள் | இவர்கள் | உவர்கள் |
| அது | இது | உது |
| அவை | இவை | உவை |
| அவைகள் | இவைகள் | உவைகள் |

**32.** எ, யா என்னும் வினாவெழுத்தின் அடி-யாகப் பிறக்கும் பெயர் வினாப் பெயராம்.

| | |
|---|---|
| எ — எவன் | யா — யாவன் |
| எவள் | யாவள் |
| எவர் | யாவர் |
| எவர்கள் | —— |
| எது | யாது |
| எவை | யாவை |

**33.** உறவைக் காட்டும் பெயர் கிளைப் பெயராம்.

தாய் அண்ணன் மாமி

**34.** சாதியைக் காட்டும் பெயர் சாதிப் பெயராம்.

இடையன் குறவன் வண்ணான்

**35.** எண்ணல், நீட்டல், முகத்தல், எடுத்தல் ஆகிய நான்கு அளவின் பெயரைக் காட்டும் பெயர் அளவுப் பெயராம்.

ஒன்று கஜம் ஆழாக்கு வீசை

**36.** தன்மைப் பெயர்கள், தன்மை ஒருமைப் பெயர், தன்மைப் பன்மைப் பெயர் என இரண்டு வகைப்படும்.

**37.** யான், நான் இவ்விரண்டும் தன்மை ஒருமைப் பெயர்களாம்.

**38.** யாம், நாம், நாங்கள் இம்மூன்றும் தன்மைப் பன்மைப் பெயர்களாம்.

**39.** முன்னிலைப் பெயர்கள், முன்னிலை ஒருமைப் பெயர், முன்னிலைப் பன்மைப் பெயர் என இருவகைப்படும்.

**40.** நீ என்பது முன்னிலை ஒருமைப் பெயராம்

**41.** நீர், நீவிர், நீங்கள் இந்த மூன்றும் முன்னிலைப் பன்மைப் பெயர்களாம்.

**42.** தன்மை, முன்னிலை யல்லாத பெயர்கள் யாவும் படர்க்கைப் பெயர்களாம்.

| | | |
|---|---|---|
| மலர் | நன்மை | எவை |
| கிராமம் | செய்கை | குறவன் |
| காலம | படித்தவன் | வீசை |
| தலை | அவள் | மைல் |

**43** தான், தாம், எல்லாம் ஆகிய மூன்றும் பொதுப்பெயர்களாம்.

| | | |
|---|---|---|
| நான் தான் | நீ தான் | அவன் தான் |
| நாம் தாம் | நீர் தாம் | அவர் தாம் |
| நாம் எல்லாம் | நீர் எல்லாம் | அவர் எல்லாம் |

**44.** ஒரு பொருளுக்கு இயல்பாயுள்ள பெயர் அதற்குச் சமபந்தப்பட்ட வேறொரு பொருளுக்கு ஆகி வருவது ஆகுபெயராம்.

தலை நோகிறது — தலைக்கு ஓர் அணு கொடு
ஊருக்குப் போனேன் — ஊர் மெச்ச நடந்தான்.

இவற்றில் முதலிலுள்ள தலையும், ஊரும் சினைபெயராகவும் இடப்பெயராகவும் இருக்கின்றன. இரண்டாவதுள்ள தலை என்பது தலையையுடைய மனிதனையும், ஊர் என்பது ஊரிலுள்ள மனிதரையும் தெரிவிக்கின்றன. இப்படி வரும் பெயர்கள் ஆகுபெயர்களாம்.

## பயிற்சி — 4.

கீழ் வரும் பெயர்ச் சொற்களை அடியிற் காட்டிய வீட்டில் பொருத்தி எழுது :—

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. நாம் பிராணிகளிடத்தில் அன்பாய் இருக்கவேண்டும்.
3. உலகத்தில் பல தேசங்களும் கண்டங்களும் உண்டு.
4. வருஷந்தோறும் பருவ காலங்கள் மாறி வருகின்றன
5. கல்விக்கு அழகு கசடு அற மொழிதல்.
6. தச்சன் மரச் சாமான் செய்து கொடுப்பான்.
7. பரதன் இராமனுக்கு அன்புள்ள சகோதரன்.
8. கண் இல்லாதவனுக்குக் கடவுளே துணை.
9. தமக்குத் துன்பம் தேடிக்கொள்பவர் யார்?
10. முனிவர்கள் மலைகளிலும் காடுகளிலும் வசிப்பார்கள்.
11. நான் போகும்போது ஊர் அடங்கிவிட்டது.
12. குடியானவன் தன் குமாரனோடு வயலுக்குப் போனான்.
13. குமணன் தன் நகரத்தைவிட்டுக் காட்டிற்குச் சென்றான்.
14. கல்விச் செல்வமே என்றும் அழியாத செல்வம்.
15. தனவான்களுக்கு எப்போதும் தாழ்மை வேண்டும்.
16. இல்லாதவன் சொல்லை எவரும் எளனம் செய்வர்.
17. சொல்கிறவன் சொன்னால் கேட்பவனுக்கு மதியில்லையா?
18. மழை பெய்தால் பயிர் பச்சை முளையும்.
19. அவனன்றி ஓர் அணுவும் அசையாது.
20. வாழ்வும் தாழ்வும் மாறி மாறி வருவது வழக்கம்.

| எண் | பெயர் | இன்ன காரணத்தினால் | இன்ன பெயர் |
|---|---|---|---|
| 1 | அன்னை | உறவின் பெயராகையால் | கிளைப் பெயர் |

## பெயர்ச் சொல்

**45.** பெயர்ச் சொற்கள் திணை, பால், எண், இடம், வேற்றுமை ஆகிய ஐந்தையும் ஏற்றுவரும்.

### (1) திணை

**46.** திணை என்பது இலக்கண நூலிற் கொள்ளப்படும் குலமாம். அது — உயர்திணை, அஃறிணை என இருவகைப்படும்.

**47.** உயர்திணை என்பது உயர்வாகிய குலம். மக்கள், தேவர் பெயர்கள் மாத்திரம் உயர்திணையாம்.

மக்கள் — மனிதன், பெண், குமாரன்
தேவர் — இந்திரன், திருமால், சிவன்.

**48.** அஃறிணை என்பது உயர்வல்லாத (தாழ்வாகிய) குலம். மக்கள், தேவர் பெயர்கள் நீங்க மற்றப் பெயர்கள் யாவும் அஃறிணையாம். (அல் + திணை = அஃறிணை.)

யானை, மலை, கல், கருடன்.

**49.** உயர்திணைப் பெயர்களின் உறுப்புக்களைத் தனியே குறிக்கும் பெயர்களும் அஃறிணையாம்.

இராமன் தலை; முருகன் கைகள்
கடவுள் பாதம்; இந்திரன் கண்கள்.

**50.** உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவான சில பெயர்கள் உண்டு. அவை திணைப் பொதுப் பெயர் எனப்படும்.

சூரியன் உதித்தான் —— சூரியன் உதித்தது.
சந்திரன் வந்தான் —— சந்திரன் வந்தது.
சுவாமி வந்தார் —— சுவாமி வந்தது.

## (2) பால்

**51.** பால் என்பது பகுப்பு. அஃது ஐந்து வகைப்படும். அவை — (1) ஆண்பால், (2) பெண்பால், (3) பலர்பால், (4) ஒன்றன்பால், (5) பலவின்பால் என்பனவாம்.

**52.** ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகிய மூன்றும் உயர்திணைக்கு உரிய பால்களாம்.

**53.** ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய இரண்டும் அஃறிணைக்கு உரிய பால்களாம்.

**54.** உயர்திணையுள் ஆணின் பெயரை உணர்த்துஞ் சொல் ஆண்பாலாம்.

முருகன், கிருஷ்ணன், இராமன்.

**55.** உயர்திணையுள் பெண்ணின் பெயரை உணர்த்துஞ் சொல் பெண்பாலாம்.

சீதை, காமாக்ஷி, மீனாக்ஷி.

(1) ஆண்பாலில் 'அன்' என்று முடியும் சில பெயர்கள் பெண்பாலில் 'இ' என்று முடியும்.

| ஆண்பால் | பெண்பால் | ஆண்பால் | பெண்பால் |
| --- | --- | --- | --- |
| அரசன் | — அரசி | தோழன் | — தோழி |
| ஒருவன் | — ஒருத்தி | நாயகன் | — நாயகி |
| குருடன் | — குருடி | பாட்டன் | — பாட்டி |
| சகோதரன் | — சகோதரி | புத்திரன் | — புத்திரி |
| செவிடன் | — செவிடி | மாமன் | — மாமி |
| தலைவன் | — தலைவி | மூடன் | — மூடி |
| திருடன் | — திருடி | மைத்துனன் | — மைத்துனி |

(2) ஆண்பாலில் 'அன்' என்று முடியும் ஜாதிப் பெயர் பெண்பாலில் 'சி' என்று முடியும்.

| ஆண்பால் | பெண்பால் | ஆண்பால் | பெண்பால் |
| --- | --- | --- | --- |
| இடையன் | — இடைச்சி | பறையன் | — பறைச்சி |
| கணக்கன் | — கணக்கச்சி | வாணியன் | — வாணிச்சி |

(3) ஆண்பாலில் 'ஆன்' என்று முடியும் ஜாதிப் பெயர் பெண்பாலில் 'தி' என்று முடியும்.

| ஆண்பால் | பெண்பால் | ஆண்பால் | பெண்பால் |
|---|---|---|---|
| கன்னான் — | கன்னாத்தி | பார்ப்பான் — | பார்ப்பாத்தி |
| தட்டான் — | தட்டாத்தி | வண்ணான் — | வண்ணாத்தி |

(4) ஆண்பாலில் 'அன்' என்று முடியும் ஜாதிப் பெயர் பெண்பாலில் 'தி' என்றும் முடியும்.

| ஆண்பால் | பெண்பால் | ஆண்பால் | பெண்பால் |
|---|---|---|---|
| குசவன் — | குசத்தி | அம்பட்டன் — | அம்பட்டத்தி |
| குறவன் — | குறத்தி | மறவன் — | மறத்தி |

(5) ஆண்பாலில் 'வான்' என்று முடியும் பெயர் பெண்பாலில் 'வதி' என்று முடியும்.

| ஆண்பால் | பெண்பால் | ஆண்பால் | பெண்பால் |
|---|---|---|---|
| குணவான் — | குணவதி | தனவான் — | தனவதி |
| பாக்யவான் — | பாக்யவதி | புண்யவான் — | புண்யவதி |

(6) ஆண்பாலில் 'அன்' என்று முடியும் பெயர் பெண்பாலில் 'அள்' என்று முடியும்.

| ஆண்பால் | பெண்பால் | ஆண்பால் | பெண்பால் |
|---|---|---|---|
| அவன் — | அவள் | யாவன் — | யாவள் |
| இவன் — | இவள் | மற்றவன் — | மற்றவள் |
| எவன் — | எவள் | நல்லவன் — | நல்லவள் |

(7) சில பெயர்ச்சொற்கள் ஆண்பாலில் வேறாக-வும், பெண்பாலில் வேறாகவும் முடியும்.

| ஆண்பால் | பெண்பால் | ஆண்பால் | பெண்பால் |
|---|---|---|---|
| அண்ணன் — | அக்கை | தந்தை — | தாய் |
| அப்பன் — | அம்மை | தம்பி — | தங்கை |

(8) 'சாலி' என்பது ஆண்பாலுக்கும் பெண் பாலுக்கும் பொதுவாக வரும்.

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| (அவன்) குணசாலி — | (அவள்) குணசாலி |
| (அவன்) தைர்யசாலி — | (அவள்) தைர்யசாலி |

(9) இகரத்தை ஈற்றிலுடைய சில பெயர்ச் சொற்கள் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாக வரும்.

| ஆண்பால் | | பெண்பால் |
|---|---|---|
| (அவன்) பாவி | — | (அவள்) பாவி |
| (அவன்) ரோகி | — | (அவள்) ரோகி |
| (அவன்) நோயாளி | — | (அவள்) நோயாளி |
| (அவன்) குற்றவாளி | — | (அவள்) குற்றவாளி |

**56.** உயர்திணையுள் பலரை யுணர்த்துவது பலர்பாலாம். அது மூன்று வகைப்படும். ஆண்பன்மை, பெண்பன்மை, ஆண்-பெண் பன்மை என்பனவாம்.

| | | |
|---|---|---|
| ஆண்பன்மை | — | மைந்தர் |
| பெண்பன்மை | — | பெண்டிர் |
| ஆண்-பெண் பன்மை | — | மக்கள் |

## பயிற்சி — 5.

கீழ் வரும் வினுக்களுக்கு விடை எழுது.

(1) பெயர்ச் சொற்கள் என்னென்ன எற்று வரும்?

(2) திணைப் பொதுப் பெயர் என்ருல் என்ன?

(3) அன், ஆன், வான் என்பவற்றைக்கொண்டு முடியும் ஆண்பாற் பெயர்கள் பெண்பாலாகும்போது எப்படி யாகும்?

(4) ஆண்பாலிலும் பெண்பாலிலும் ஒரே தன்மையாக இருக்கும் சில பெயர்கள் சொல்லு.

(5) ஆண்பாலில் வேருகவும், பெண்பாலில் வேருகவும் வரும் சில பெயர்கள் சொல்லு.

(6) அஃறிணையில் ஆண் பெண் என்னும் பேதம் இல்லாமைக்கு நியாயம் என்ன?

## பயிற்சி — 6.

கீழ்வரும் பெயர்களில் ஆண்பாலைப் பெண்பாலாகவும் பெண்பாலை ஆண்பாலாகவும் மாற்றி எழுது.

1. என் தகப்பனார் என்னை இன்று வரவழைத்தார்.
2. பார்ப்பான் தன் வீட்டுக்குப் போகக் கண்டேன்.
3. வாணியன் நல்லெண்ணெய் விற்கிறான்.
4. குறவன் ஈச்சம்பாய் நன்றாய் முடைகிறான்.
5. கிறிஸ்தவன் ஏழைகளுக்கு மருந்து தந்தான்.
6. அரசன் குடிகளிடத்தில் அன்பு உள்ளவன்.
7. தோழர்கள் என்னை விட்டுப் போனார்கள்.
8. சக்கரவர்த்தி தேசங்களைச் சுற்றி வருகிறார்.
9. எனது தம்பி நேற்று ஊருக்குப் போனான்.
10. பாட்டனார் பேரன்மாரைப் பார்க்கவந்தார்.
11. அக்காள் எனக்குப் பாடம் கற்பித்தாள்.
12. அரசி தன் பாங்கியோடு உலவுகின்றாள்.
13. அம்பட்டத்தி இன்று இங்கே வருவாள்.
14. சேணிச்சி தோட்டத்தில் நூல் நூற்கிறாள்.
15. குள்ளியும் கள்ளியும் கூடிப் போனார்கள்.
16. அவள் தன் சிநேகிதியைத் தேடினாள்.
17. வேடிச்சி இரண்டு பெண்களை வளர்த்தாள்.
18. என் தங்கை தன் குமாரனை அனுப்பினாள்.
19. புத்திரி பிறந்ததால் களிப்பு அடைந்தாள்.
20. மூன்று எருதுகள் மந்தையில் மேய்கின்றன.
21. உபாத்தியாயர் தம் புத்திரனைப் பார்த்து, 'பிள்ளாய், நீ ராஜகுமாரனைக் கண்டு, நமது வீட்டுக்கு விருந்தாளியாக வரும்படி வேண்டிக்கொள்' என்றார்.
22. என் பாட்டனார் தம் பேரனை அழைத்து, 'சிறுவ, உன் தம்பியைக் கூட்டிக்கொண்டு சக்கரவர்த்தி வருவதைப் பார்க்கப்போ' என்றார்.

## (3) எண்

**57**. எண் என்பது அளவு. அது, ஒருமை, பன்மை என இருவகைப்படும்.

**58**. ஒருமை ஒரு பொருளை உணர்த்தும்.

**59**. பன்மை ஒன்றுக்கு மேற்பட்ட பொருளை உணர்த்தும். ஒருமைப் பெயரோடு 'கள்' சேர்ந்தால் பன்மைப் பெயராகும்.

| ஒருமை | | பன்மை | ஒருமை | | பன்மை |
|---|---|---|---|---|---|
| யானை | — | யானைகள் | மணி | — | மணிகள் |
| காய் | — | காய்கள் | மாடு | — | மாடுகள் |
| கால் | — | கால்கள் | வீடு | — | வீடுகள் |
| ஆடு | — | ஆடுகள் | அம்பு | — | அம்புகள் |
| வேர் | — | வேர்கள் | கிளை | — | கிளைகள் |

**60**. ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் இம் மூன்றும் ஒருமைப் பால்களாம்.

**61**. பலர்பால், பலவின்பால் இவ்விரண்டும் பன்மைப் பால்களாம்.

(1) 'மார்' என்பது பலர்பாலை உணர்த்த வரும்; அதனோடு 'கள்' என்பது சேர்ந்து வருதலும் உண்டு.

| ஒருமை | | பன்மை | | பன்மை |
|---|---|---|---|---|
| குரு | — | குருமார் | — | குருமார்கள் |
| செட்டி | — | செட்டிமார் | — | செட்டிமார்கள் |
| தம்பி | — | தம்பிமார் | — | தம்பிமார்கள் |
| துரை | — | துரைமார் | — | துரைமார்கள் |
| தோழி | — | தோழிமார் | — | தோழிமார்கள் |
| பாங்கி | — | பாங்கிமார் | — | பாங்கிமார்கள் |
| மந்திரி | — | மந்திரிமார் | — | மந்திரிமார்கள் |

(2) ஆண்பாலில் 'அன்' என்றும், பெண்பாலில் 'அள்' என்றும் முடியும் பெயர்கள் பலர்பா லாகும் போது முறையே 'ன்' என்பதும் 'ள்' என்பதும் 'ர்' என்று மாறி 'கள்' என்று முடியும்.

| ஆண்பால் | | பெண்பால் | | இருபாற் பன்மை |
|---|---|---|---|---|
| அவன் | — | அவள் | — | அவர்கள் |
| இவன் | — | இவள் | — | இவர்கள் |
| எவன் | — | எவள் | — | எவர்கள் |
| மற்றவன் | — | மற்றவள் | — | மற்றவர்கள் |

(3) ஆண்பாலில் 'அன்' என்றும், பெண்பாலில் 'அள்' எனறும் முடியும் பெயர்கள் மரியாதை ஒருமையில் 'அர்' என்று முடியும்.

| ஆண்பால் | | பெண்பால் | | மரியாதை ஒருமை |
|---|---|---|---|---|
| அவன் | — | அவள் | — | அவர் |
| இவன் | — | இவள் | — | இவர் |
| எவன | — | எவள் | — | எவர் |
| மற்றவன் | — | மற்றவள் | — | மற்றவர் |

(4) 'ஆர்' என்பதும் மரியாதை ஒருமையாக வரும்.

| ஒருமை | மரியாதை ஒருமை | ஒருமை | மரியாதை ஒருமை |
|---|---|---|---|
| அண்ணன் | அண்ணஞர் | தந்தை | தந்தையார் |
| ஔவை | ஔவையார் | பாட்டி | பாட்டியார் |
| தாய் | தாயார் | மாமன் | மாமஞர் |

## (4) இடம்

**62**. இடம் என்பது தானம். அது (1) தன்மை (2) முன்னிலை, (3) படர்க்கை என மூன்று வகைப்படும்.

**63**. பேசுவோன் இடம் தன்மையாம்.

| தன்மை ஒருமை | | தன்மைப் பன்மை |
|---|---|---|
| நான் | — | நாம், நாங்கள் |
| யான் | — | யாம், யாங்கள் |

**64**. தன்மையிடத்தவன் பேசுவதைக் கேட்டு முன்னிற்போன் இடம் முன்னிலையாம்.

| முன்னிலை ஒருமை | முன்னிலைப் பன்மை |
|---|---|
| நீ | நீர், நீங்கள் |

**65**. தன்மை முன்னிலை இடத்தவர்களால் பேசப்படும் விஷயம் சென்று படரும் இடம் படர்க்கையாம்.

படர்க்கை ஆண்பால் — அவன்
படர்க்கைப் பெண்பால் — அவள்
படர்க்கைப் பலர்பால் — அவர்கள்
படர்க்கை ஒன்றன்பால் — அது
படர்க்கைப் பலவின்பால் — அவை

**66**. தான், தாம், எல்லாம் என்பன மூன்று இடங்களிலும் வரும் பொதுப் பெயர்களாம்.

## பயிற்சி — 7.

கீழ் வரும் பெயர்களை அடியிற் காட்டிய வீடுகளிற் பொருத்து.

1. இது என் தகப்பனார் வாங்கிய தோட்டம்.
2. இராமன் தசரத சக்கரவர்த்தியின் புத்திரன்.
3. நேற்று யான் வாங்கினது ஒரு பந்தயக் குதிரை.
4. அதுதான் என் தமையனார் எழுதிய கடிதம்.
5. இந்தக் கிராமமே நாங்கள் வசிக்கும் இடம்.
6. மாணிக்கம் என் உடன்பிறந்த சகோதரன்.

| பெயர் | திணை | பால் | எண் | இடம் |
|---|---|---|---|---|
| | | | | |

## பயிற்சி—8.

கீழ் வரும் பெயர்களில் ஒருமையைப் பன்மையாகவும் பன்மையை ஒருமையாகவும் மாற்றி எழுது.

1. நாய் வீட்டை வெகு பத்திரமாகக் காக்கிறது.
2. எறும்பு மிகவும் சுறுசுறுப்புள்ள பிராணி.
3. ஈ எப்பொழுதும் சுத்தமாகவே இருக்கும்.
4. மனிதனே நன்மை தீமைகளை அறிவான்.
5. தம்பி செட்டியோடு கடைக்குப் போனன்.
6. கொடிப்பூ கொத்துக் கொத்தாய் மலர்கிறது.
7. அந்தப் பிள்ளை புத்தகம் வாங்கப் போனன்.
8. மரத்தில் இலை தழைத்து இருப்பதைப் பார்.
9. சோம்பேறி சோற்றுக் கலைந்து திரிவான்.
10. உபாத்தியாயர் பிள்ளைகள்மேல் அன்புள்ளவர்.
11. பசுக்கள் மதுரமான பாலைத் தருகின்றன.
12. பிள்ளைகளைக் காப்பது தகப்பன்மார் கடமை.
13. வேடர்கள் மிருகங்களை வதைப்பார்கள்.
14. வர்த்தகர் பொதிமாடுகளை ஓட்டுகிறார்கள்.
15. சிறுவர்கள் வீதிகளில் விளையாடுகிறார்கள்.
16. குதிரைகள் வண்டிகளை இழுக்க உதவும்.
17. நல்லவை இவை கெட்டவை இவை என்று அறிந்து நடப்பதே அறிவுடையோர்க்கு அழகாம்.
18. ஆறு மலையில் உற்பத்தியாகிக் காட்டிலும் நாட்டிலும் பாய்ந்து சமுத்திரத்தில் சங்கமமாகின்றது.
19. பயிரிடும் குடிகளுக்கு ஆடுகளினாலும் மாடுகளினாலும் உண்டாகும் பயன் சொற்பமன்று.
20. பட்டணத்தில் பஞ்சம் தோற்றுது.

## (5) வேற்றுமை

**67.** வருமொழியை நோக்கிப் பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமையாம். அஃது எட்டு வகைப்படும். அவை,

1. முதல் வேற்றுமை
2. இரண்டாம் வேற்றுமை
3. மூன்றாம் வேற்றுமை
4. நான்காம் வேற்றுமை
5. ஐந்தாம் வேற்றுமை
6. ஆறாம் வேற்றுமை
7. ஏழாம் வேற்றுமை
8. எட்டாம் வேற்றுமை

என்பனவாம்.

### முதல் வேற்றுமை.

**68.** பொருளின் இயல்பான பெயரே முதல் வேற்றுமையாம். அஃது எழுவாய் வேற்றுமை எனவும்படும்.

எழுவாய் வேற்றுமை வினை, பெயர், வினாக்களில் ஒன்றைக் கொண்டு முடியும்.

முருகன் வந்தான் — வினையைக் கொண்டது
அது என் குதிரை — பெயரைக் கொண்டது
அவன் யார்? — வினாவைக் கொண்டது

### இரண்டாம் வேற்றுமை

**69.** இரண்டாம் வேற்றுமையின் உருபு, ஐ என்பது. அதன் பொருள் ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை என்பனவாம். இது செயப்படுபொருள் வேற்றுமை எனவும் படும்.

குடத்தைச் செய்தான் ——— ஆக்கப்படுபொருள்.
வீட்டை யிடித்தான் ——— அழிக்கப்படுபொருள்.
ஊரைச் சேர்ந்தான் ——— அடையப்படுபொருள்.
மாட்டை விட்டான் ——— நீக்கப்படுபொருள்.
புலியை நிகர்த்தான் ——— ஒக்கப்படுபொருள்.
பொன்னை யுடையான் ——— உடைமைப்பொருள்.

## மூன்றும் வேற்றுமை.

**70**. மூன்றும் வேற்றுமையின் உருபு ஆல், ஒடு, ஓடு என்பனவாம். அவற்றின் பொருள் கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி என்பனவாம்.

1. கருவி — முதற் கருவி, துணைக் கருவி என இரண்டு வகைப்படும்.

(*a*) முதற் கருவி, செயப்படு பொருளோடு ஒற்றுமையுடையதாய், செயப்படு பொருளுக்கு இன்றியமையாததாய், தானே செயப்படு பொருளாவதாய் உள்ளது.

மண்ணாற் செய்யப்பட்ட குடம் —— முதற் கருவி.

(*b*) துணைக் கருவி, முதற் கருவி காரியப்படுமளவும் அதற்குத் துணையாய் உடனின்று உதவுவது.

உளியால் செய்யப்பட்ட கதவு —— துணைக் கருவி.

2. கருத்தா — ஏவுதற் கருத்தா, இயற்றுதற் கருத்தா என இரண்டு வகைப்படும்.

(*a*) இயற்றுதற் கருத்தா, கருவியைச் செய்யும் கருத்தா, தச்சனால் ஆகிய கோயில் — இயற்றுதற்கருத்தா.

(*b*) ஏவுதற் கருத்தா, கருவியைச் செய்விக்கும் கருத்தா. அரசனால் ஆகிய கோயில் —— ஏவுதற் கருத்தா.

3. உடனிகழ்ச்சிப் பொருளாவது வினைகொண்டு முடியும் பொருளின் தொழிலைத் தன்னிடத்தும் உடனிகழ்வதாகவுடைய பொருளாம்.

தகப்பனோடு மகன் வந்தான்—உடனிகழ்ச்சிப்பொருள்.

## நான்காம் வேற்றுமை.

**71**. நான்காம் வேற்றுமையின் உருபு கு என்பதாம். அதன் பொருள் கோடை, பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை முதலியனவாம்.

| | | |
|---|---|---|
| யாசகர்க்குப் பொன் கொடுத்தான் | —— | கொடை. |
| பாம்புக்குப் பகை கருடன் | —— | பகை. |
| சாத்தனுக்குச் சிநேகன் கொற்றன் | —— | நேர்ச்சி. |
| அரசர்க்கு செங்கோல் உரியது | —— | தகுதி. |
| காப்புக்குப் பொன் கொடுத்தான் | —— | அதுவாதல். |
| கூலிக்கு வேலை செய்தான் | —— | பொருட்டு. |
| தசரதனுக்கு மகன் இராமன் | —— | முறை. |

### ஐந்தாம் வேற்றுமை.

**72.** ஐந்தாம் வேற்றுமையின் உருபு, இன். இல் முதலியனவாம். அவற்றிற்கு நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என்பன பொருளாம்.

| | |
|---|---|
| மலையின் வீழருவி | —— நீக்கப்பொருள். |
| காக்கையிற் கரிது களம்பழம் | —— ஒப்புப்பொருள். |
| மதுரையின் வடக்குச் சென்னை | —— எல்லைப்பொருள். |
| கல்வியிற் பெரியன் கம்பன் | —— ஏதுப் பொருள். |

### ஆறம் வேற்றுமை.

**73.** ஆறும் வேற்றுமையின் உருபு அது, உடைய என்பனவாம. அவற்றின் பொருள் பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம், திரிபின் ஆக்கம் ஆகிய ஐந்து தற்கிழமையும், பொருள், இடம், காலம் ஆகிய மூன்று பிறிதின்கிழமையும் ஆகும்.

#### தற்கிழமை

| | |
|---|---|
| 1. இராமனது கருமை | —— குணப்பண்புத்தற்கிழமை. |
| 2. இராமனது கை | —— உறுப்புத்தற்கிழமை. |
| 3. மனிதாது தொகுதி | —— ஒனறன்கூட்டத்திற்கிழமை. |
| 4. படைகளது தொகுதி | —— பலவினீட்டத்தற்கிழமை. |
| 5. நெல்லினது பொரி | —— திரிபினுக்கத்தற்கிழமை. |

#### பிறிதின்கிழமை.

| | |
|---|---|
| முருகனது பசு | —— பொருட்பிறிதின்கிழமை. |
| முருகனது வீடு | —— இடப்பிறிதின் கிழமை. |
| முருகனது நாள் | —— காலப்பிறிதின் கிழமை. |

### ஏழாம் வேற்றுமை.

**74.** ஏழாம் வேற்றுமையின் உருபு இல், கண் முதலியனவாம்; பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய ஆறும் தற்கிழமை பிறிதின் கிழமை இரண்டிற்கும் இடமாய் நிற்றல் அவற்றின் பொருளாம.

பொருள் —

| | | | |
|---|---|---|---|
| மணியில் ஒளி | பொருள் | இடமான | தற்கிழமை. |
| பனையில் அன்றில் | ,, | ,, | பிறிதின் கிழமை. |

இடம் —

| | | | |
|---|---|---|---|
| ஊரில் வீடு | இடம் | இடமான | தற்கிழமை. |
| ஆகாயத்தில் பருந்து | ,, | ,, | பிறிதின்கிழமை. |

காலம் —

| | | | |
|---|---|---|---|
| நாளில் நாழிகை | காலம் | இடமான | தற்கிழமை. |
| ஆடியில் பாதிரி பூத்தது | ,, | ,, | பிறிதின்கிழமை. |

சினை —

| | | | |
|---|---|---|---|
| கையில் விரல் | சினை | இடமான | தற்கிழமை. |
| கையில் மோதிரம் | ,, | ,, | பிறிதின்கிழமை. |

குணம் —

| | | | |
|---|---|---|---|
| கருமையில் அழகு | குணம் | இடமான | தற்கிழமை. |
| இளமையில் செல்வம் | ,, | ,, | பிறிதின்கிழமை. |

தொழில் —

| | | | |
|---|---|---|---|
| ஆட்டத்தில் அபிநயம் | தொழில் | இடமான | தற்கிழமை. |
| ஆட்டத்தில் பாட்டு | ,, | ,, | பிறிதின்கிழமை. |

## எட்டாம் வேற்றுமை.

**75.** எட்டாம் வேற்றுமையின் உருபுகள், விளியடைந்த பெயரின் ஈறு திரிதல், ஈறு கெடுதல, ஈறு மிகுதல், ஈற்று அயலெழுத்துத் திரிதல், ஈறு இயல்பாதல் முதலியனவாம். இதன் பொருள் படர்க்கைப் பொருளை முன்னிலையாக அழைத்தலாம். இதனை **விளி வேற்றுமை** யென்பதே வழக்கு.

| | | | |
|---|---|---|---|
| அம்மை | —— | அம்மா | (ஈறு திரிதல்.) |
| அரசன் | —— | அரச | (ஈறு கெடுதல்.) |
| மகன் | —— | மகனே | (ஈறு மிகுதல்.) |
| மக்கள் | —— | மக்காள் | (ஈற்றயலெழுத்துத் திரிதல்.) |
| தம்பி | —— | தம்பி | (இயல்பு.) |

## விளி ஏலாத பெயர்கள்.

**76.** தன்மைப் பெயர்கள், முன்னிலைப் பெயர்கள், சுட்டுப் பெயர்கள், வினைப் பெயர்கள், பொதுப் பெயர்கள் ஆகிய இவை விளிவேற்றுமையில் வருவதில்லை.

## வேற்றுமையில் வேறுபடும் பெயர்கள்.

**77.** ஐ, ஆல், கு, இன், அது, கண் ஆகிய இவ்வுருபுகளை ஏற்கும்போது,

| | | | |
|---|---|---|---|
| தான் | என்பது | தன் | எனவும், |
| தாம் | என்பது | தம் | எனவும், |
| யான் | என்பது | என் | எனவும், |
| யாம் | என்பது | எம் | எனவும், |
| நாம் | என்பது | நம் | எனவும், |
| நீ | என்பது | நின், உன் | எனவும், |
| நீர் | என்பது | நும், உம் | எனவும் |

முறையே விகாரப்பட்டு வரும்.

| வேற்றுமை | தான் | தாம் | யான் | யாம் |
|---|---|---|---|---|
| 2 | தன்னை | தம்மை | என்னை | எம்மை |
| 3 | தன்னால் | தம்மால் | என்னால் | எம்மால் |
| 4 | தனக்கு | தமக்கு | எனக்கு | எமக்கு |
| 5 | தன்னின் | தம்மின் | என்னின் | எம்மின் |
| 6 | தனது | தமது | எனது | எமது |
| 7 | தன்னில் | தம்மில் | என்னில் | எம்மில் |

| வேற்றுமை | நாம் | நீ | | நீர் | |
|---|---|---|---|---|---|
| 2 | நம்மை | நின்னை | உன்னை | நும்மை | உம்மை |
| 3 | நம்மால் | நின்னால் | உன்னால் | நும்மால் | உம்மால் |
| 4 | நமக்கு | நினக்கு | உனக்கு | நுமக்கு | உமக்கு |
| 5 | நம்மின் | நின்னின் | உன்னின் | நும்மின் | உம்மின் |
| 6 | நமது | நினது | உனது | நுமது | உமது |
| 7 | நம்மில் | நின்னில் | உன்னில் | நும்மில் | உம்மில் |

**78.** நான் என்பது எழுவாய் வேற்றுமையில் மாத்திரம் வரும்.

நான் கண்டேன்.

**79.** எழுவாய் வேற்றுமையும் விளி வேற்றுமையும் தவிர, மற்ற வேற்றுமைகள் இன், அன், அ, அத்து, அற்று என்னும் சாரியைகளில் ஒன்றைப் பெற்றும் வரும.

| | | சாரியை | |
|---|---|---|---|
| கையினை — | (கை + | இன் + | ஐ) |
| அதனால் — | (அது + | அன் + | ஆல்) |
| எனக்கு — | (என் + | அ + | கு) |
| மரத்தால் — | (மரம் + | அத்து + | ஆல்) |
| அவற்றில் — | (அவை + | அற்று + | இல்) |

**80.** மகர ஈற்றுப் பெயர்கள் உருபு ஏற்கும்போது மகரங் கெட அத்துச் சாரியை பெறும். பெறுமிடத்துச் சாரியை முதல் அகரம் கெடும்.

| | | | |
|---|---|---|---|
| குளத்தை | (குளம் + | அத்து + | ஐ) |
| மனத்தால் | (மனம் + | அத்து + | ஆல்) |
| முகத்தில் | (முகம் + | அத்து + | இல்) |

**81.** எல்லாம் என்பது மகரம் கெட அற்றுச் சாரியையும் உருபுக்குப் பின்னால் உம் என்னும் இடைச் சொல்லும் பெறும்.

எல்லாவற்றையும் (எல்லாம் + அற்று + ஐ + உம்)
எல்லாவற்றாலும் (எல்லாம் + அற்று + ஆல் + உம்)

**82.** அகரத்தை ஈற்றிலுடைய பலவின்பாற் பெயர்கள் அற்றுச் சாரியை பெறும்.

| | | | |
|---|---|---|---|
| பலவற்றை | (பல + | அற்று + | ஐ) |
| சிலவற்றை | (சில + | அற்று + | ஐ) |
| தீயவற்றை | (தீய + | அற்று + | ஐ) |
| பெரியவற்றை | (பெரிய + | அற்று + | ஐ) |
| சிறியவற்றால் | (சிறிய + | அற்று + | ஆல்) |

**83.** அவை, இவை, எவை, யாவை, பெரியவை, சிறியவை முதலியவை ஈற்றுப் பலவின்பாற் படர்க்கைப் பெயர்கள் உருபேற்கும்போது ஈற்று ஐகாரங் கெட்டு அற்றுச் சாரியை பெறும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அவற்றை | (அவை | + | அற்று | + | ஐ) |
| யாவற்றை | (யா | + | அற்று | + | ஐ) |
| இவற்றை | (இவை | + | அற்று | + | ஐ) |
| பெரியவற்றை | (பெரிய | + | அற்று | + | ஐ) |
| எவற்றை | (எவை | + | அற்று | + | ஐ) |
| சிறியவற்றை | (சிறிய | + | அற்று | + | ஐ) |

**84.** யா என்னும் படர்க்கைப் பலவின்பாற் பெயர் அற்றுச் சாரியை பெறும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாவற்றை | (யா | + | அற்று | + | ஐ) |
| யாவற்றால் | (யா | + | அற்று | + | ஆல்) |

பயிற்சி — 9.

8. ஆம் பயிற்சியில் வந்த பெயர்ச் சொற்களை அடியில் காட்டிய வீடுகளில் பொருத்தி எழுது —

| பெயர் | திணை | பால் | எண் | இடம் | வேற்றுமை | வேற்றுமைப் பொருள் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# II. வினை இயல்

**85.** பொருளின் தொழிலைக் காட்டுவது வினைச்சொல்லாம்.

மழை பெய்தது, கோழி கூவுகிறது, கடவுள் காப்பார்.

மேல் வாக்கியங்களில் பெய்தது, கூவுகிறது, காப்பார் என்னும் சொற்கள், மழை, கோழி, கடவுள் என்னும் பொருளின் தொழிலைக் காட்டுவதனால் வினைச்சொற்களாம்.

**86.** வினைச்சொல் தெரிநிலைவினை, குறிப்புவினை என்று இருவகைப்படும்.

## தெரிநிலை வினை

முக்கியமாகச் செய்கை, காலம், கர்த்தா ஆகிய மூன்று விஷயங்களை வெளிப்படையாக உணர்த்தும் வினைச்சொல் தெரிநிலை வினைமுற்று எனப்படும்.

பெய்தது — இது பெய்தலாகிய செய்கையையும், இறந்த காலத்தையும், மழை என்னும் கர்த்தாவையும் உணர்த்துகிறது.

கூவுகிறது — இது கூவுதலாகிய செய்கையையும், நிகழ் காலத்தையும், கோழி என்னும் கர்த்தாவையும் உணர்த்துகிறது.

காப்பார் — இது காத்தலாகிய செய்கையையும், எதிர் காலத்தையும், கடவுள் என்னும் கர்த்தாவையும் உணர்த்துகின்றது.

## பகுதி

**87.** வினைச்சொல்லில் செய்கையைக் காட்டும் உறுப்பு சொல்லின் முதலில் நிற்கும்; அதற்குப் பகுதி என்று பெயர்.

பெய்தது — இதில் பெய் என்பது பகுதி
கூவுகிறது — இதில் கூ என்பது
காப்பார் — இதில் கா என்பது

(பகுதி எப்போதும் கட்டளையிடுவதுபோல் இருக்கும்.)

## பயிற்சி — 10

இந்தச் சொற்களில் பகுதிகளைச் சொல்லு.

| | | |
|---|---|---|
| செய்தான் | ஓடினன் | எழுதுகிறோம் |
| தின்பேன் | பார்த்தது | வருகிறார்கள் |
| படிக்கின்றார் | பேசினாய் | சிரிப்பீர்கள் |
| மேய்ந்தன | உண்கின்றீர் | நின்றன |

## இடைநிலை

**88**. வினைச்சொல்லில் காலங்காட்டும் உறுப்பு இடையில் நிற்கும்; அதற்கு இடைநிலை என்று பெயர். (இடை - சொல்லின் இடையில், நிலை - நிற்பது.)

பெய்தது — இதில் த் என்னும் உறுப்பு இடையில் நின்று இறந்தகாலம் காட்டிற்று.

கூவுகிறது — இதில் கிறு என்னும் உறுப்பு இடையில் நின்று நிகழ்காலம் காட்டிற்று.

காப்பார் — இதில் ப் என்னும் உறுப்பு இடையில் நின்று எதிர்காலம் காட்டிற்று.

**89**. காலம் மூன்றுவகை, அவை: — இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பன.

**90**. இறந்தகாலம் தொழில் முன்பே நடந்துவிட்டதை உணர்த்தும். த், ட், ற், இன், இ, ன் ஆகிய ஆறும் இறந்தகால இடைநிலைகளாம்.

செய்தான் — (செய் + த் + ஆன்) த் இடைநிலை.
உண்டான் — (உண் + ட் + ஆன்) ட் இடைநிலை.

கற்ருன் — (கல் + ற் + ஆன்) ற் இடைநிலை.
பேசினுர் — (பேசு + இன் + ஆர்) இன் இடைநிலை.
ஓடியது — (ஓடு + இ + து) இ இடைநிலை.
போனுன் — (போ + ன் + ஆன்) ன் இடைநிலை.

**91.** நிகழ்காலம் தொழில் இப்போது நடக்கிறதை உணர்த்தும்; கிறு, கின்று ஆகிய இரண்டும் நிகழ்கால இடைநிலைகளாம்.

செய்கிறேன் —(செய் + கிறு + என்) கிறு இடைநிலை.
பாடுகின்ருன் — (பாடு + கின்று + ஆன்) கின்று இடைநிலை.

**92.** எதிர்காலம் தொழில் இனி நடக்கப்போவதை உணர்த்தும்; ப், வ் ஆகிய இரண்டும் எதிர்கால இடை நிலைகளாம்.

படிப்பேன் (படி + ப் + என்) ப் இடைநிலை.
செய்வார் (செய் + வ் + ஆர்) வ் இடைநிலை.

## பயிற்சி — II

இந்தச் சொற்களிலுள்ள இடைநிலைகளை எழுது.

| | | |
|---|---|---|
| படிப்போம் | பாடுகின்ருள் | போவேன் |
| நின்ருள் | நிற்பேன் | குடிக்கிருன் |
| பேசுகிருள் | கொடுத்தார் | உணர்வான் |
| ஆடிற்று | ஆடினுள் | மேய்ந்தது |
| உதிக்கிறது | வருகிறது | கொய்வாள் |
| உண்டாள் | வந்தேன் | கொணர்ந்தான் |
| கொண்டேன் | ஆயிற்று | வாழ்த்துவேன் |

| சொல் | இடைநிலை | இன்ன காலம் உணர்த்திற்று |
|---|---|---|
| | | |

## விகுதி

**93**. வினைச்சொல்லில் செய்பவனைக் காட்டும் உறுப்பு சொல்லின் கடையில் நிற்கும்; அதற்கு விகுதி என்று பெயர்.

(1) ஏன் விகுதி தன்மை ஒருமை வினைமுற்றைக் காட்டும்.

செய்தேன் படிக்கிறேன் எழுதுவேன்

(2) ஓம் விகுதி தன்மைப் பன்மை வினைமுற்றைக் காட்டும்.

செய்தோம் படிக்கிறோம் எழுதுவோம்

(3) ஆய் விகுதி முன்னிலை ஒருமை வினைமுற்றைக் காட்டும்.

செய்தாய் படிக்கிறாய் எழுதுவாய்

(4) ஈர் விகுதி முன்னிலைப் பன்மை வினைமுற்றைக் காட்டும்.

செய்தீர் படிக்கிறீர் எழுதுவீர்

ஈர் விகுதியோடு கள் விகுதியும் சேர்ந்து வரும்.

செய்தீர்கள் படிக்கிறீர்கள் எழுதுவீர்கள்

(5) ஆன், அன் விகுதிகள் ஆண்பால் வினைமுற்றைக் காட்டும்.

செய்தான் படிக்கின்றான் எழுதுவான்
செய்தனன் படிக்கின்றனன் எழுதுவன்

(6) ஆள், அள் விகுதிகள் பெண்பால் வினைமுற்றைக் காட்டும்.

செய்தாள் படிக்கின்றாள் எழுதுவாள்
செய்தனள் படிக்கின்றனள் எழுதுவள்

(7) ஆர், அர் விகுதிகள் பலர்பால் வினைமுற்றைக் காட்டும்.

செய்தார் படிக்கின்றார் எழுதுவார்
செய்தனர் படிக்கின்றனர் எழுதுவர்

ஆர் விகுதியோடு கள் விகுதியும் சேர்ந்து வரும்.

செய்தார்கள் படிக்கிறார்கள் எழுதுவார்கள்

(8) து, று விகுதிகள் ஒன்றன்பால் வினைமுற்றைக் காட்டும்;
எதிர்காலத்தில் உம் விகுதி வரும்.

நடந்தது நடக்கிறது நடக்கும்
ஓடிற்று - (று விகுதி இறந்த காலத்தில் மட்டும் வரும்.)

(9) அ விகுதி பலவின்பால் வினைமுற்றைக் காட்டும்;
எதிர் காலத்தில் உம் விகுதி வரும்.

நடந்தன நடக்கின்றன நடக்கும்

## பயிற்சி — 12.

இந்தச் சொற்களில் விகுதிகளை எடுத்து எழுது.

| | | |
|---|---|---|
| நடந்தன | நடக்கின்றன | நடக்கும் |
| மேய்ந்தன | கண்டோம் | கொடுத்தீர் |
| குடித்தார் | நடந்தாய் | அஞ்சினோம் |
| வந்தேன் | தின்றோம் | முடித்தாய் |
| பாய்ந்தது | ஆடினாள் | முடிந்தது |
| ஓடினர் | முழுகினோம் | பறந்தன |
| ஆடிற்று | வளர்த்தனன் | எழுதினீர்கள் |

| சொல் | விகுதி | இன்ன விகுதி |
|---|---|---|
| | | |

## குறிப்பு வினைமுற்று

**94.** காலத்தை வெளிப்படையாக உணர்த்தாத வினைச் சொல்லுக்குக் குறிப்பு வினைமுற்று என்று பெயர்.

நல்லது, கெட்டது, பெரியது, சிறியது.

## செயப்படு பொருள் குன்றாவினை

**95**. வினைச்சொற்களில் சில செயப்படு பொருளை ஏற்கும், சில ஏற்கமாட்டா. செயப்படு பொருளை ஏற்கும் வினைச்சொல்லுக்குச் செயப்படு பொருள் குன்றாவினைச் சொல் என்று பெயர்.

வாங்கினன் — (எதை ? புஸ்தகத்தை)
கண்டான் — (யாரை ? அவனை)

இந்த வினைச்சொற்களின் முன் யார் அல்லது எதை என்று வைத்து வினவினல் விடை வரும். இப்படிப்பட்ட வினைகள் செயப்படு பொருள் குன்றாவினைச் சொற்களாம்.

## செயப்படு பொருள் குன்றியவினை

**96**. செயப்படு பொருளை ஏற்காத வினைச்சொல்லுக்குச் செயப்படு பொருள் குன்றிய வினைச் சொல் என்று பெயர்.

நடந்தான் தூங்குகிறது போவான்

இந்த வினைச் சொற்களின் முன் யார் அல்லது எதை என்று வைத்து வினவினல் விடை வாராது. இப்படிப்பட்ட வினைகள் செயப்படு பொருள்குன்றிய வினைகளாம்.

## தன்வினை, பிறவினை

**97**. வினை, தன்வினை, பிறவினை என இருவகைப்படும். தன்வினை, தன் கர்த்தாவின் செயல் தன்னிடத்தே உள்ள வினைச்சொல்.

அவன் படித்தான், அவன் நடந்தான்.

**98.** பிறவினை வேறு கருத்தாவின் செயலைக்-கொண்டு முடியும் வினைச் சொல்.

அண்ணன் தம்பியைப் படிப்பித்தான்.

இதில் தம்பி தொழில் படித்தல், அண்ணன் தொழில் தம்பியைப் படிக்கும்படி செய்தல். ஆதலால், படிப்பித்தான் என்பது பிறவினையாம்.

**99.** தன்வினைப் பகுதி, வி, பி, கு, சு, டு, து, பு, று என்னும் விகுதிகளில் ஏற்ற ஒன்றைப் பெற்றால் பிறவினையாகும்.

| | | | |
|---|---|---|---|
| செய் | ——— | செய்வி | (வி) |
| உண் | ——— | உண்பி | (பி) |
| போ | ——— | போக்கு | (கு) |
| பாய் | ——— | பாய்ச்சு | (சு) |
| உருள் | ——— | உருட்டு | (டு) |
| நட | ——— | நடத்து | (து) |
| பர | ——— | பரப்பு | (பு) |
| துயில் | ——— | துயிற்று | (று) |

**100.** சில தன்வினைப் பகுதிகள் பிறவினையாகும்-போது இடையிலுள்ள மெல்லெழுத்து வல்லெழுத்-தாகத் திரியும்.

வருந்து — வருத்து

**101.** சில தன்வினைப் பகுதிகள் பிறவினையாகும்-போது இடையே ஒரு வல்லெழுத்து மிகும்.

ஓடு — ஓட்டு
உருகு — உருக்கு

## உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை

**102**. வினைச்சொற்கள் உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை என இருவகைப்படும்.

**103**. உடன்பாட்டுவினை தொழிலின் நிகழ்ச்சியை உணர்த்தும்.

**104** எதிர்மறைவினை தொழிலின் நிகழ்ச்சியை மறுப்பதை உணர்த்தும்.

**105**. எதிர்மறைவினை, உடன்பாட்டு வினைப்பகுதிகளின்மேல் ஆகாரவிகுதி புணர்ந்தும், புணர்ந்து கெட்டும் வரப்பெறும்; இது மூக்காலத்துக்கும் பொதுவாம்.

உண்ணுதான், உண்ணேன்.

இங்கே உண் பகுதி, ஆ எதிர்மறை விகுதி, ண் சந்தி, உண்ணு என அனைத்தும் ஒரு பகுதி, த் எழுத்துப்பேறு, ஆன் உயர்திணை ஆண்பாற் படர்க்கை விகுதி. தில் எதிர்மறை ஆகார விகுதி புணர்ந்து வந்தது.

உண் பகுதி, ஆ எதிர்மறை விகுதி, ண் சந்தி, ஏன் தன்மையொருமை விகுதி. இதில் எதிர்மறை ஆகாரவிகுதி புணர்ந்து கெட்டது.

## வினையின் வகைகள்

**106**. வினைச்சொல் — வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் என ஐந்து வகைப்படும்.

### வினைமுற்று

**107**. விகுதியால் திணை பால் இடங்களைக் காட்டி வருவது வினைமுற்று.

இருந்தான். செய்தாள். படித்தேன்.

இந்த விகுதிகள், திணை, பால், இடங்களைக் காட்டின.

### பெயரெச்சம், வினை யெச்சம்

**108**. எச்சம் என்பது குறைவு; அது விகுதி-யால் திணை, பால், இடம் காட்டாது.

**109**. எச்சம்—பெயரெச்சம், வினையெச்சம் என இருவகைப்படும்.

பெயரைக்கொண்டு முடியும் எச்சம் பெயரெச்-சம், வினையைக்கொண்டு முடியும் எச்சம் வினை-யெச்சம்.

படித்த பாடம் (பெயரெச்சம்)
படித்து முடித்தான் (வினையெச்சம்)

இங்கே படித்த படித்து என்னுஞ் சொற்களிலுள்ள அகரவிகுதியும், உகரவிகுதியும் திணை, பால், இடங்களைக் காட்டாமல் எச்சவிகுதிகளாய் முறையே பெயரையும் வினையையுங் கொண்டு முடிந்தமை காண்க.

### தொழிற் பெயர்

**110**. விகுதியடைந்த தொழிற் பெயர் தல், அல், அம், ஐ, கை, பு, வி, தி, சி, காடு, இல், அடம், உள், வு, வை, மதி, இ முதலியவாம்.

| | | | |
|---|---|---|---|
| தல் | — செய்தல் | காடு | — வேக்காடு |
| அல் | — உண்ணல் | இல் | — எச்சில் |
| அம் | — ஆட்டம் | அடம் | — கட்டடம் |
| ஐ | — நிலை | உள் | — விக்குள் |
| கை | — வருகை | வு | — செலவு |
| பு | — சார்பு | வை | — பார்வை |
| வி | — கல்வி | மதி | — ஏற்றுமதி |
| தி | — மறதி | இ | — வெகுளி |
| சி | — புகழ்ச்சி | | |

### வினையா லணையும் பெயர்

**111**. வினைமுற்று பெயர்த்தன்மை யடைந்து வேற்றுமை யுருபேற்பது வினையா லணையும்பெயராம்.

படித்தவனுக்குப் புகழுண்டு.

இதில் படித்தவன் என்பது பெயர்த்தன்மை யடைந்து வேற்றுமை யுருபேற்று வந்தது.

## தெரிநிலைப் பெயரெச்சம்

**112.** தெரிநிலைப் பெயரெச்சம், இறந்தகாலப் பெயரெச்சம், நிகழ்காலப் பெயரெச்சம், எதிர்காலப் பெயரெச்சம் என மூன்று வகைப்படும்.

**113.** இறந்தகால நிகழ்காலப் பெயரெச்சங்கள் அவ்வக்கால இடை நிலைகளோடு அகர விகுதிபெறும்.

படித்த பையன் — இறந்தகாலப் பெயரெச்சம்
படிக்கிற பையன் — நிகழ்காலப் பெயரெச்சம்

**114.** எதிர்காலப் பெயரெச்சம் இடை நிலை பெறாமல் உம் விகுதி பெற்று வரும். சில, கு என்னும் சாரியையும் பெறும்.

உண்ணும் பையன்; படிக்கும் பையன்.

## குறிப்புப் பெயரெச்சம்

**115.** காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் பெயரைக்கொண்டு முடியும் எச்சம் குறிப்புப் பெயரெச்சமாம்.

பெரிய பையன், சிறிய வீடு, கரிய குதிரை.

**116.** எதிர்மறைப் பெயரெச்சம் ஆகார விகுதியும், தகர எழுத்துப் பேறும், அகர விகுதியும் பெற்று வரும்.

படியாத பாடம். (படி + ஆ + த் + அ)

இது, படி என்னும் பகுதியும், எதிர்மறை ஆகார விகுதியும், தகர எழுத்துப்பேறும், அகர விகுதியும் பெற்று வந்தது.

## தெரிநிலை வினையெச்சம்

**117**. தெரிநிலை வினையெச்சம், இறந்தகால வினையெச்சம், நிகழ்கால வினையெச்சம், எதிர்கால வினையெச்சம் என மூன்று வகைப்படும்.

**118**. இறந்தகால வினையெச்சம் இறந்தகால இடைநிலையோடு உகர விகுதியும் பெறும்.

படித்து — (படி + த் + உ)
உண்டு — (உண் + ட் + உ)
தின்று — (தின் + ற் + உ)

இங்கு உகர விகுதி முறையே த், ட், ற் இடைநிலைகளைப் பெற்றுவந்தது.

**119**. நிகழ்கால வினையெச்சம் பகுதியோடு அகர விகுதி பெற்று, கு என்னும் சாரியை பெற்றும் பெறாதும் வரும்.

படிக்க — (குச் சாரியை பெற்று வந்தது)
எண்ண — (சாரியை பெறாது வந்தது)

**120**. எதிர்கால வினையெச்சம் இன், ஆல், கால் என்னும் விகுதிகளில் ஒன்றைப் பெறும்.

**121**. இன் விகுதி கு என்னும் சாரியை பெற்றும் பெறாதும் வரும்.

படிக்கின் — (படி + கு + இன்)
உண்ணின் — (உண் + — + இன்)

**122**. ஆல் விகுதி பெரும்பாலும் துச் சாரியையும், சிறுபான்மை இன் சாரியையும் பெற்றும், சில இடத்தில் சாரியை பெறாமலும் வரும்.

படித்தால் — (படி + து + ஆல்)
உண்டால் — (உண் + து + ஆல்)
ஆடினல் — (ஆடு + இன் + ஆல்)
விட்டால் — (விடு + — + ஆல்)

**123**. கால் விகுதி து, அ ஆகிய இரண்டு சாரியை பெற்றுவரும்.

படித்தக்கால் — (படி + து + அ + கால்)
உண்டக்கால் — (உண் + து + அ + கால்)

## குறிப்பு வினையெச்சம்

**124**. காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் வினையைக் கொண்டு முடியும் எச்சம் குறிப்பு-வினையெச்சமாம்.

மெல்லப் பேசினன் பைய நடந்தான்.

**125**. எதிர்மறை வினையெச்சம் ஆகார விகுதியோடு மல், மே விகுதிகளில் ஒன்றும், உகர விகுதியும், சில விடத்தில் தகர எழுத்துப் பேறும் பெற்று வரும்.

உண்ணமல் — (உண் + ஆ + மல்)
இது ஆகார விகுதியோடு மல் விகுதி பெற்றது.

உண்ணமே — (உண் + ஆ + மே)
இது ஆகார விகுதியோடு மே விகுதி பெற்றது.

உண்ணது — (உண் + ஆ + த் + உ)
இது ஆகார விகுதியோடு, தகர எழுத்துப் பேறும் உகர விகுதியும் பெற்றது.

## ஏவல் வினை

**126**. ஏவல்வினை கட்டளைப் பொருளைத் தரும் முற்றுச்சொல். அது முன்னிலை யிடத்துக்கே உரித்தாய் வரும்.

**127.** உடன்பாட்டு ஏவலொருமை ஆய் விகுதி புணர்ந்தும், புணர்ந்து கெட்டும் வரும்.

உண்ணாய் — இது ஆய் விகுதி புணர்ந்து வந்தது.
உண் — இது ஆய் விகுதி புணர்ந்து கெட்டு [வந்தது.

**128.** உடன்பாட்டு ஏவற்பன்மை மின், உம், ஈர் விகுதிகளில் ஒன்றைப் பெறும்.

உண்மின் — இது மின் விகுதி பெற்று வந்தது.
உண்ணும் — இது உம் விகுதி பெற்று வந்தது.
உண்ணீர் — இது ஈர் விகுதி பெற்று வந்தது.

**129.** எதிர்மறை ஏவல் ஒருமை ஏல், அல் விகுதிகளில் ஒன்றைப் பெறும்.

உண்ணேல் — இது ஏல் விகுதி பெற்று வந்தது.
உண்ணல் — இது அல் விகுதி பெற்று வந்தது.

**130.** எதிர்மறை ஏவற் பன்மை அல் விகுதியோடு மின் விகுதியும பெறும்.

உண்ணன்மின் — (உண் + அல் + மின்) இது அல் விகுதியோடு மின் விகுதியும் பெற்றது.

வியங்கோள்

**131.** வியங்கோள் இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும் முற்றுச் சொல்; அஃது ஏவற் பொருளைக்கொண்டு நிற்கும்.

அஃது உடன்பாட்டில் க விகுதியும், எதிர்மறையில் அல் விகுதியோடு க விகுதியும் பெறும்.

உண்க — (உண் + க) உடன்பாடு;
இது க விகுதி பெற்றது
உண்ணற்க — (உண் + அல் + க) எதிர்மறை;
இது அல் விகுதியோடு க விகுதியும் பெற்றது.

## தன்மை ஒருமை — நான்

| பகுதி | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | எதிர்மறை |
|---|---|---|---|---|
| செய் | செய்தேன் | செய்கிறேன் | செய்வேன் | செய்யேன் |
| ஓடு | ஓடினேன் | ஓடுகிறேன் | ஓடுவேன் | ஓடேன் |
| அணி | அணிந்தேன் | அணிகிறேன் | அணிவேன் | அணியேன் |
| செல் | சென்றேன் | செல்கிறேன் | செல்வேன் | செல்லேன் |
| வில் | விற்றேன் | விற்கிறேன் | விற்பேன் | விற்கேன் |
| தின் | தின்றேன் | தின்கிறேன் | தின்பேன் | தின்னேன் |
| காண் | கண்டேன் | காண்கிறேன் | காண்பேன் | காணேன் |
| கொள் | கொண்டேன் | கொள்கிறேன் | கொள்வேன் | கொள்ளேன் |
| கேள் | கேட்டேன் | கேட்கிறேன் | கேட்பேன் | கேளேன் |
| நடு | நட்டேன் | நடுகிறேன் | நடுவேன் | நடேன் |
| படி | படித்தேன் | படிக்கிறேன் | படிப்பேன் | படியேன் |
| நட | நடந்தேன் | நடக்கிறேன் | நடப்பேன் | நடவேன் |
| தா | தந்தேன் | தருகிறேன் | தருவேன் | தாரேன் |
| வா | வந்தேன் | வருகிறேன் | வருவேன் | வாரேன் |
| கல் | கற்றேன் | கற்கிறேன் | கற்பேன் | கல்லேன் |

## தன்மைப் பன்மை — நாம்

| பகுதி | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | எதிர்மறை |
|---|---|---|---|---|
| செய் | செய்தோம் | செய்கிறோம் | செய்வோம் | செய்யோம் |
| ஓடு | ஓடினோம் | ஓடுகிறோம் | ஓடுவோம் | ஓடோம் |
| அணி | அணிந்தோம் | அணிகிறோம் | அணிவோம் | அணியோம் |
| செல் | சென்றோம் | செல்கிறோம் | செல்வோம் | செல்லோம் |
| வில் | விற்றோம் | விற்கிறோம் | விற்போம் | விற்கோம் |
| தின் | தின்றோம் | தின்கிறோம் | தின்போம் | தின்னோம் |
| காண் | கண்டோம் | காண்கிறோம் | காண்போம் | காணோம் |
| கொள் | கொண்டோம் | கொள்கிறோம் | கொள்வோம் | கொள்ளோம் |
| கேள் | கேட்டோம் | கேட்கிறோம் | கேட்போம் | கேளோம் |
| நடு | நட்டோம் | நடுகிறோம் | நடுவோம் | நடோம் |
| படி | படித்தோம் | படிக்கிறோம் | படிப்போம் | படியோம் |
| நட | நடந்தோம் | நடக்கிறோம் | நடப்போம் | நடவோம் |
| தா | தந்தோம் | தருகிறோம் | தருவோம் | தாரோம் |
| வா | வந்தோம் | வருகிறோம் | வருவோம் | வாரோம் |
| கல் | கற்றோம் | கற்கிறோம் | கற்போம் | கல்லோம் |

## முன்னிலை ஒருமை — நீ

| பகுதி | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | எதிர்மறை |
|---|---|---|---|---|
| செய் | செய்தாய் | செய்கிறாய் | செய்வாய் | செய்யாய் |
| ஓடு | ஓடினாய் | ஓடுகிறாய் | ஓடுவாய் | ஓடாய் |
| அணி | அணிந்தாய் | அணிகிறாய் | அணிவாய் | அணியாய் |
| செல் | சென்றாய் | செல்கிறாய் | செல்வாய் | செல்லாய் |
| வில் | விற்றாய் | விற்கிறாய் | விற்பாய் | விற்காய் |
| தின் | தின்றாய் | தின்கிறாய் | தின்பாய் | தின்னாய் |
| காண் | கண்டாய் | காண்கிறாய் | காண்பாய் | காணாய் |
| கொள் | கொண்டாய் | கொள்கிறாய் | கொள்வாய் | கொள்ளாய் |
| கேள் | கேட்டாய் | கேட்கிறாய் | கேட்பாய் | கேளாய் |
| நடு | நட்டாய் | நடுகிறாய் | நடுவாய் | நடாய் |
| படி | படித்தாய் | படிக்கிறாய் | படிப்பாய் | படியாய் |
| நட | நடந்தாய் | நடக்கிறாய் | நடப்பாய் | நடவாய் |
| தா | தந்தாய் | தருகிறாய் | தருவாய் | தாராய் |
| வா | வந்தாய் | வருகிறாய் | வருவாய் | வாராய் |
| கல் | கற்றாய் | கற்கிறாய் | கற்பாய் | கற்காய் |

## முன்னிலைப் பன்மை — நீர்

| பகுதி | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | எதிர்மறை |
|---|---|---|---|---|
| செய் | செய்தீர் | செய்கிறீர் | செய்வீர் | செய்யீர் |
| ஓடு | ஓடினீர் | ஓடுகிறீர் | ஓடுவீர் | ஓடீர் |
| அணி | அணிந்தீர் | அணிகிறீர் | அணிவீர் | அணியீர் |
| செல் | சென்றீர் | செல்கிறீர் | செல்வீர் | செல்லீர் |
| வில் | விற்றீர் | விற்கிறீர் | விற்பீர் | வில்லீர் |
| தின் | தின்றீர் | தின்கிறீர் | தின்பீர் | தின்னீர் |
| காண் | கண்டீர் | காண்கிறீர் | காண்பீர் | காணீர் |
| கொள் | கொண்டீர் | கொள்கிறீர் | கொள்வீர் | கொள்ளீர் |
| கேள் | கேட்டீர் | கேட்கிறீர் | கேட்பீர் | கேளீர் |
| நடு | நட்டீர் | நடுகிறீர் | நடுவீர் | நடீர் |
| படி | படித்தீர் | படிக்கிறீர் | படிப்பீர் | படியீர் |
| நட | நடந்தீர் | நடக்கிறீர் | நடப்பீர் | நடவீர் |
| தா | தந்தீர் | தருகிறீர் | தருவீர் | தாரீர் |
| வா | வந்தீர் | வருகிறீர் | வருவீர் | வாரீர் |
| கல் | கற்றீர் | கற்கிறீர் | கற்பீர் | கல்லீர் |

## படர்க்கை ஆண்பால் — அவன்

| பகுதி | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | எதிர்மறை |
|---|---|---|---|---|
| செய் | செய்தான் | செய்கிறான் | செய்வான் | செய்யான் |
| ஓடு | ஓடினான் | ஓடுகிறான் | ஓடுவான் | ஓடான் |
| அணி | அணிந்தான் | அணிகிறான் | அணிவான் | அணியான் |
| செல் | சென்றான் | செல்கிறான் | செல்வான் | செல்லான் |
| வில் | விற்றான் | விற்கிறான் | விற்பான் | வில்லான் |
| தின் | தின்றான் | தின்கிறான் | தின்பான் | தின்னான் |
| காண் | கண்டான் | காண்கிறான் | காண்பான் | காணான் |
| கொள் | கொண்டான் | கொள்கிறான் | கொள்வான் | கொள்ளான் |
| கேள் | கேட்டான் | கேட்கிறான் | கேட்பான் | கேளான் |
| நடு | நட்டான் | நடுகிறான் | நடுவான் | நடான் |
| படி | படித்தான் | படிக்கிறான் | படிப்பான் | படியான் |
| நட | நடந்தான் | நடக்கிறான் | நடப்பான் | நடவான் |
| தா | தந்தான் | தருகிறான் | தருவான் | தாரான் |
| வா | வந்தான் | வருகிறான் | வருவான் | வாரான் |
| கல் | கற்றான் | கற்கிறான் | கற்பான் | கல்லான் |

P31(?) N21
34968



## படர்க்கைப் பெண்பால் — அவள்

| பகுதி | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | எதிர்மறை |
|---|---|---|---|---|
| செய் | செய்தாள் | செய்கிறாள் | செய்வாள் | செய்யாள் |
| ஓடு | ஓடினாள் | ஓடுகிறாள் | ஓடுவாள் | ஓடாள் |
| அணி | அணிந்தாள் | அணிகிறாள் | அணிவாள் | அணியாள் |
| செல் | சென்றாள் | செல்கிறாள் | செல்வாள் | செல்லாள் |
| வில் | விற்றாள் | விற்கிறாள் | விற்பாள் | வில்லாள் |
| தின் | தின்றாள் | தின்கிறாள் | தின்பாள் | தின்னாள் |
| காண் | கண்டாள் | காண்கிறாள் | காண்பாள் | காணாள் |
| கொள் | கொண்டாள் | கொள்கிறாள் | கொள்வாள் | கொள்ளாள் |
| கேள் | கேட்டாள் | கேட்கிறாள் | கேட்பாள் | கேளாள் |
| நடு | நட்டாள் | நடுகிறாள் | நடுவாள் | நடாள் |
| படி | படித்தாள் | படிக்கிறாள் | படிப்பாள | படியாள் |
| நட | நடந்தாள் | நடக்கிறாள் | நடப்பாள் | நடவாள் |
| தா | தந்தாள் | தருகிறாள் | தருவாள் | தாராள் |
| வா | வந்தாள் | வருகிறாள் | வருவாள் | வாராள் |
| கல் | கற்றாள் | கற்கிறாள் | கற்பாள் | கல்லாள் |

## படர்க்கைப் பலர்பால் — அவர்

| பகுதி | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | எதிர்மறை |
|---|---|---|---|---|
| செய் | செய்தார் | செய்கிறார் | செய்வார் | செய்யார் |
| ஓடு | ஓடினார் | ஓடுகிறார் | ஓடுவார் | ஓடார் |
| அணி | அணிந்தார் | அணிகிறார் | அணிவார் | அணியார் |
| செல் | சென்றார் | செல்கிறார் | செல்வார் | செல்லார் |
| வில் | விற்றார் | விற்கிறார் | விற்பார் | வில்லார் |
| தின் | தின்றார் | தின்கிறார் | தின்பார் | தின்னார் |
| காண் | கண்டார் | காண்கிறார் | காண்பார் | காணார் |
| கொள் | கொண்டார் | கொள்கிறார் | கொள்வார் | கொள்ளார் |
| கேள் | கேட்டார் | கேட்கிறார் | கேட்பார் | கேளார் |
| நடு | நட்டார் | நடுகிறார் | நடுவார் | நடார் |
| படி | படித்தார் | படிக்கிறார் | படிப்பார் | படியார் |
| நட | நடந்தார் | நடக்கிறார் | நடப்பார் | நடவார் |
| தா | தந்தார் | தருகிறார் | தருவார் | தாரார் |
| வா | வந்தார் | வருகிறார் | வருவார் | வாரார் |
| கல் | கற்றார் | கற்கிறார் | கற்பார் | கல்லார் |

## படர்க்கை ஒன்றன்பால் — அது

| பகுதி | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | எதிர்மறை |
|---|---|---|---|---|
| செய் | செய்தது | செய்கிறது | செய்யும் | செய்யாது |
| ஓடு | ஓடினது | ஓடுகிறது | ஓடும் | ஓடாது |
| அணி | அணிந்தது | அணிகிறது | அணியும் | அணியாது |
| செல் | சென்றது | செல்கிறது | செல்லும் | செல்லாது |
| வில் | விற்றது | விற்கிறது | விற்கும் | விற்காது |
| தின் | தின்றது | தின்கிறது | தின்னும் | தின்னாது |
| காண் | கண்டது | காண்கிறது | காணும் | காணாது |
| கொள் | கொண்டது | கொள்கிறது | கொள்ளும் | கொள்ளாது |
| கேள் | கேட்டது | கேட்கிறது | கேட்கும் | கேளாது |
| நடு | நட்டது | நடுகிறது | நடும் | நடாது |
| படி | படித்தது | படிக்கிறது | படிக்கும் | படியாது |
| நட | நடந்தது | நடக்கிறது | நடக்கும் | நடவாது |
| தா | தந்தது | தருகிறது | தரும் | தாராது |
| வா | வந்தது | வருகிறது | வரும் | வாராது |
| கல் | கற்றது | கற்கிறது | கற்கும் | கற்காது |

## படர்க்கைப் பலவின்பால் — அவை

| பகுதி | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | எதிர்மறை |
|---|---|---|---|---|
| செய் | செய்தன | செய்கின்றன | செய்யும் | செய்யா |
| ஓடு | ஓடின | ஓடுகின்றன | ஓடும் | ஓடா |
| அணி | அணிந்தன | அணிகின்றன | அணியும் | அணியா |
| செல் | சென்றன | செல்கின்றன | செல்லும் | செல்லா |
| வில் | விற்றன | விற்கின்றன | விற்கும் | வில்லா |
| தின் | தின்றன | தின்கின்றன | தின்னும் | தின்னா |
| காண் | கண்டன | காண்கின்றன | காணும் | காணா |
| கொள் | கொண்டன | கொள்கின்றன | கொள்ளும் | கொள்ளா |
| கேள் | கேட்டன | கேட்கின்றன | கேட்கும் | கேளா |
| நடு | நட்டன | நடுகின்றன | நடும் | நடா |
| படி | படித்தன | படிக்கின்றன | படிக்கும் | படியா |
| நட | நடந்தன | நடக்கின்றன | நடக்கும் | நடவா |
| தா | தந்தன | தருகின்றன | தரும் | தாரா |
| வா | வந்தன | வருகின்றன | வரும் | வாரா |
| கல் | கற்றன | கற்கின்றன | கற்கும் | கல்லா |

## முக்காலப் பெயரெச்சங்கள்

| பகுதி | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | எதிர்மறை |
|---|---|---|---|---|
| செய் | செய்த | செய்கிற | செய்யும் | செய்யாத |
| ஓடு | ஓடின | ஓடுகிற | ஓடும் | ஓடாத |
| அணி | அணிந்த | அணிகிற | அணியும் | அணியாத |
| செல் | சென்ற | செல்கிற | செல்லும் | செல்லாத |
| வில் | விற்ற | விற்கிற | விற்கும் | வில்லாத |
| தின் | தின்ற | தின்கிற | தின்னும் | தின்னாத |
| காண் | கண்ட | காண்கிற | காணும் | காணாத |
| கொள் | கொண்ட | கொள்கிற | கொள்ளும் | கொள்ளாத |
| கேள் | கேட்ட | கேட்கிற | கேட்கும் | கேளாத |
| நடு | நட்ட | நடுகிற | நடும் | நடாத |
| படி | படித்த | படிக்கிற | படிக்கும் | படிக்காத |
| நட | நடந்த | நடக்கிற | நடக்கும் | நடக்காத |
| தா | தந்த | தருகிற | தரும் | தாராத |
| வா | வந்த | வருகிற | வரும் | வாராத |
| கல் | கற்ற | கற்கிற | கற்கும் | கல்லாத |

## முக்கால வினை யெச்சங்கள்

| பகுதி | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | எதிர்மறை |
|---|---|---|---|---|
| செய் | செய்து | செய்ய | செய்தால் | செய்யாமல் |
| ஓடு | ஓடி | ஓட | ஓடினால் | ஓடாமல் |
| அணி | அணிந்து | அணிய | அணிந்தால் | அணியாமல் |
| செல் | சென்று | செல்ல | சென்றால் | செல்லாமல் |
| வில் | விற்று | விற்க | விற்றால் | வில்லாமல் |
| தின் | தின்று | தின்ன | தின்றால் | தின்னாமல் |
| காண் | கண்டு | காண | கண்டால் | காணாமல் |
| கொள் | கொண்டு | கொள்ள | கொண்டால் | கொள்ளாமல் |
| கேள் | கேட்டு | கேட்க | கேட்டால் | கேளாமல் |
| நடு | நட்டு | நட | நட்டால் | நடாமல் |
| படி | படித்து | படிக்க | படித்தால் | படிக்காமல் |
| நட | நடந்து | நடக்க | நடந்தால் | நடக்காமல் |
| தா | தந்து | தர | தந்தால் | தாராமல் |
| வா | வந்து | வர | வந்தால் | வாராமல் |
| கல் | கற்று | கற்க | கற்றால் | கல்லாமல் |

## பிறவினை

| பகுதி | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | எதிர்மறை |
|---|---|---|---|---|
| செய் | செய்வித்தேன் | செய்விக்கிறேன் | செய்விப்பேன் | செய்வியேன் |
| ஓடு | ஓடுவித்தேன் | ஓடுவிக்கிறேன் | ஓடுவிப்பேன் | ஓடுவியேன் |
| அணி | அணிவித்தேன் | அணிவிக்கிறேன் | அணிவிப்பேன் | அணிவியேன் |
| செல் | செல்வித்தேன் | செல்விக்கிறேன் | செல்விப்பேன் | செல்வியேன் |
| வில் | விற்பித்தேன் | விற்பிக்கிறேன் | விற்பிப்பேன் | விற்பியேன் |
| தின் | தின்பித்தேன் | தின்பிக்கிறேன் | தின்பிப்பேன் | தின்பியேன் |
| காண் | காண்பித்தேன் | காண்பிக்கிறேன் | காண்பிப்பேன் | காண்பியேன் |
| கொள் | கொள்வித்தேன் | கொள்விக்கிறேன் | கொள்விப்பேன் | கொள்வியேன் |
| கேள் | கேட்பித்தேன் | கேட்பிக்கிறேன் | கேட்பிப்பேன் | கேட்பியேன் |
| நடு | நடுவித்தேன் | நடுவிக்கிறேன் | நடுவிப்பேன் | நடுவியேன் |
| படி | படிப்பித்தேன் | படிப்பிக்கிறேன் | படிப்பிப்பேன் | படிப்பியேன் |
| நட | நடப்பித்தேன் | நடப்பிக்கிறேன் | நடப்பிப்பேன் | நடப்பியேன் |
| தா | தருவித்தேன் | தருவிக்கிறேன் | தருவிப்பேன் | தருவியேன் |
| வா | வருவித்தேன் | வருவிக்கிறேன் | வருவிப்பேன் | வருவியேன் |
| கல் | கற்பித்தேன் | கற்பிக்கிறேன் | கற்பிப்பேன் | கற்பியேன் |

## III. இடையியல்

**132**. இடைச் சொல்லாவது பெயர் வினைகளைப் போல் தனித்து வாராமல் அவைகளைச் சார்ந்து வருஞ் சொல்லாம்.

**133**. வேற்றுமை உருபுகளும், விகுதிகளும், சாரியைகளும், சுட்டும், வினாவும் இடைச் சொற்களாம்.

**134**. முன், பின் என்பன காலப் பொருளையும், இடப் பொருளையுந் தந்து ஏழாம் வேற்றுமைப் பொருளிலேயே வரும் இடைச் சொற்களாம்.

*முன் பிறந்தான், பின் பிறந்தான் (காலம்)*
*முன் உட்கார்ந்தான், பின் உட்கார்ந்தான் (இடம்)*

**135**. பின் என்பது மற்று என்னும் பொருளிலும் வரும்.

*அதை யன்றிப் பின் எதைச் செய்தான்?*

☞ முன், பின் என்பவை முன்பு, பின்பு ; முன்னை, பின்னை ; முன்னர், பின்னர் எனவும், மற்று - என்பது மற்றை எனவும் விகாரப்பட்டும் வரும்.

## IV. உரியியல்

**136**. உரிச் சொல் என்பது குணத்தை உணர்த்திப் பெயர் வினைகளுக்கு உரிமைபூண்டு வழங்குஞ் சொல்லாம்.

*நனி பேதை (பெயருரிச் சொல்),*
*தவ உழைத்தான் (வினையுரிச் சொல்)*

**137**. சால, உறு, தவ, நனி, கூர், கழி என்பன மிகுதி என்னும் ஒரே பொருளை உணர்த்தும் உரிச் சொற்களாம்.

**138**. கடி என்பது காவல், கூர்மை, வாசனை, ஒளி, அச்சம், சிறப்பு, புதுமை, மிகுதி, விரைவு முதலிய பல பொருள்களை உணர்த்தும் உரிச் சொல்லாம்.

## V. புணரியல்

**139.** புணர்ச்சி நிலைமொழியீறும் வருமொழி முதலும் ஒன்றுபடப் புணர்வதாம்.

நிலைமொழி முன்னிற்கும்மொழி, வருமொழி பின்னிற்கும்மொழி.

**140.** புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப்புணர்ச்சி என இருவகைப்படும்.

### வேற்றுமைப் புணர்ச்சி

**141.** சொற்கள் புணரும்போது இடையில் வேற்றுமை யுருபுகள் மறைந்தேனும், வெளிப்பட்டேனும் வருவது வேற்றுமைப் புணர்ச்சியாம்.

**142.** சொற்கள் புணரும்போது இடையே வேற்றுமை யுருபு மறைந்து வருவது வேற்றுமைத் தொகையாம்.

**143.** சொற்கள் புணரும்போது இடையே வேற்றுமை யுருபு வெளிப்பட்டு வருவது வேற்றுமை விரியாம்.

| வேற்றுமைத் தொகை | | வேற்றுமை விரி |
|---|---|---|
| 2. புத்தகம் வாங்கினன் | —— | புத்தகத்தை வாங்கினன். |
| 3. கண் பார்த்தார் | —— | கண்ணால் பார்த்தார். |
| 4. கூலி வேலை | —— | கூலிக்கு வேலை. |
| 5. மலை வீழ் அருவி | —— | மலையிலிருந்து வீழ் அருவி. |
| 6. முருகன் வீடு | —— | முருகனது வீடு. |
| 7. வீடு புகுந்தான் | —— | வீட்டில் புகுந்தான். |

**144** வேற்றுமை யுருபுகள் மறைந்தாவது, வெளிப்பட்டாவது வாராமல், சொற்கள் புணர்வது அல்வழிப் புணர்ச்சியாம். உருபில்லாத முதல் வேற்-

றுமையும், எட்டாம் வேற்றுமையும் அல்வழியில் சேர்க்கப்படும்.

## அல்வழிப் புணர்ச்சி

**145**. அல்வழிப் புணர்ச்சி — அல்வழித் தொகை நிலைத் தொடர், அல்வழித் தொகா நிலைத் தொடர் என இருவகைபபடும்.

## அல்வழித் தொகை நிலைத் தொடர்.

**146** அல்வழித தொகை நிலைத் தொடர் ஐந்து வகையாம. அவை —

வினைத் தொகை, பண்புத் தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை என்பனவாம.

1. சுடுசோறு ——— வினைத் தொகை.

இது சுட்ட சோறு, சுடுகின்ற சோறு, சுடுஞ் சோறு என விரியும்.

2. செங்கல் ——— பண்புத் தொகை.

இது செம்மையாகிய கல் என விரியும், ஆகிய என்பது பண்புருபு.

பனை மரம்———இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

இது பனையாகிய மரம் என விரியும். இதில் சிறப்-புப் பெயர் முன்னும், பொதுப்பெயர் பின்னும்வரும்.

3. மதி முகம் ——— உவமைத் தொகை.

இது மதிபோன்ற முகம் என விரியும்.

4. இராப் பகல் ——— உம்மைத் தொகை.

இது இரவும் பகலும் என விரியும்.

5. தேன் மொழி வந்தாள் —— அன்மொழித் தொகை.

இது தேன்போன்ற மொழியை உடையவள் வந்தாள் என விரியும். இங்கு, தேன்மொழி என்பது உவமைத் தொகையாம். வந்தாள் என்னும் வினையினால் மொழியை உடையவள் என அன்மொழித் தொகையாயிற்று.

## அல்வழித் தொகா நிலைத் தொடர்

**147.** அல்வழித் தொகா நிலைத்தொடர் ஒன்பது வகையாம்; அவை —

எழுவாய்த் தொடர், விளித் தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத் தொடர், வினைமுற்றுத் தொடர், குறிப்பு வினைமுற்றுத் தொடர், இடைச் சொற்றொடர், உரிச் சொற்றொடர், அடுக்குத் தொடர் என்பனவாம்.

1. இராமன் வந்தான் —— எழுவாய்த் தொடர்
2. முருகா வா —— விளித் தொடர்
3. ஓடின குதிரை —— பெயரெச்சத் தொடர்
4. வந்து போனான் —— வினையெச்சத் தொடர்
5. வந்தான் இராமன் —— வினைமுற்றுத் தொடர்
6. பொன்னன் இவன் —— (குறிப்பு) ,,
7. மற்றொன்று —— இடைச் சொற்றொடர்
8. நனிபேதை —— உரிச் சொற்றொடர்
9. பாம்பு, பாம்பு —— அடுக்குத் தொடர்

**148.** புணர்ச்சி — இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி யென இருவகைப்படும்.

**149.** இயல்பு புணர்ச்சி, நிலைமொழியும் வருமொழியும் விகாரப்படாமல் புணர்வதாம்.

பொன் + மலை = பொன் மலை,
நிலம் + பெரிது = நிலம் பெரிது.

**150.** விகாரப் புணர்ச்சி, நிலைமொழியீறும், வருமொழி முதலும் புணரும்போது தோன்றல், திரிதல், கெடுதல் ஆகிய மூவகை விகாரங்களில் ஒன்றேனும் பலவேனும் உண்டாகப் புணர்வதாம்.

**151.** தோன்றல் விகாரம் எழுத்தாயினும் சாரியை யாயினுந் தோன்றப் பதங்கள் புணர்வது.

வாழை + பழம் = வாழைப்பழம், (எழுத்துத் தோன்றல்)
புளி + காய் = புளியங்காய், (சாரியை தோன்றல்)

**152.** திரிதல் விகாரம், நிலைமொழியின் ஈறெழுத்தாயினும், வருமொழியின் முதலெழுத்தாயினும், அவ்விரண்டுமாயினும் திரிந்து வருவது.

பொன் + சரடு = பொற்சரடு.
இதில் நிலைமொழி யீறு திரிந்தது.
விண் + நாடு = விண்ணாடு.
இதில் வருமொழி முதல் திரிந்தது.
கல் + தூண் = கற்றூண்.
இதில் நிலைமொழி யீறும், வருமொழி முதலுந் திரிந்தன.

**153.** கெடுதல் விகாரம் நிலைமொழியீறு கெட்டு வருவது.

மரம் + நார் = மரநார்.

**154.** தனிமெய்யைச் சேராத மெய்யெழுத்துக்குப் பின் உயிர் வரின் அவ்வுயிர் மெய்யோடு கூடும்.

கால் + அடி = காலடி.

**155.** உம்மைத் தொகையில் க, ச, த, ப வரின் இயல்பாம்.

சேர சோழ பாண்டியர்.

**156** மொழிக்குக் கடைசியில் வரும் எல்லா எழுத்தின் பின்னும் ஞ, ந, ம, ய, வ ஆகிய எழுத்துக்கள் இயல்பாம்.

வாய் ஞானம், தாய் நன்மை, பொல்லா மனம்.
விலை யாது, நாய் வால்.

**157**. பெயரெச்சத்தின் பின் வரும் க, ச, த, ப இயல்பாம்.

படியாத பாடம், படித்த பையன், சிறிய பையன்.

**158**. மூன்றும் வேற்றுமை ஒடு, ஓடு உருபின் பின்னும், ஆறும் வேற்றுமை அது உருபின் பின்னும் வரும க, ச, த, ப இயல்பாம்.

அவனொடு பேசினான் —— (ஒடு)
அவனோடு சொன்னான் —— (ஓடு)
மகளது கற்பு —— (அது)

**159** இரண்டாம் வேற்றுமைத் தொகையில் க, ச, த, ப இயல்பாம்.

மலர் கொய்தாள்.

**160** விகார எண்ணுப் பெயரின் பின் வரும் க, ச, த, ப இயல்பாம்.

ஒரு பேச்சு, இரு சாண்,
அறு பதம், எழு கடல்.

**161**. பல, சில என்னும் அஃறிணைப் பலவின்பாற் பெயரின் பின் வரும் க, ச, த, ப இயல்பாம்.

பல பேச்சு, சில காரியம்.

**162**. வினைத் தொகையில் க, ச, த, ப இயல்பாம்.

சுடு காடு ஓடு கால் நிறை செல்வம்.

**163** உயிரெழுத்தின் பின் க, ச, த, ப மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஆடி | + | திங்கள் | = | ஆடித்திங்கள். |
| கார்த்திகை | + | தீபம் | = | கார்த்திகைத் தீபம். |
| கரி | + | கோடு | = | கரிக்கோடு. |
| தீ | + | பிழம்பு | = | தீப் பிழம்பு. |

**164**. இ, ஈ, ஐ என்னும், உயிரெழுத்தின் பின் உயிர்வரின் யகர வுடம்படு மெய் தோன்றும்.

| | | | | |
|---|---|---|---|---|
| மணி | + | அழகு | = | மணியழகு. |
| தீ | + | எரிந்தது | = | தீயெரிந்தது. |
| கை | + | ஒடிந்தது | = | கையொடிந்தது. |

**165**. அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் ஏழு உயிர் எழுத்துக்களுக்குப் பின் உயிர் வரின் வகர வுடம்படு மெய் தோன்றும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பல | + | அடி | = | பலவடி. |
| பலா | + | அடி | = | பலாவடி. |
| திரு | + | அடி | = | திருவடி. |
| பூ | + | அடி | = | பூவடி. |
| நொ | + | அழகா | = | நொவ்வழகா. |
| கோ | + | அடி | = | கோவடி. |
| கௌ | + | அழகு | = | கௌவழகு. |

**166**. எகர, வினாவின் பின்னும், சுட்டின் பின்னும் உயிரும் யகரமும் வந்தால் வகரந் தோன்றும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| எ | + | உயிர் | = | எவ்வுயிர் | எ | + | யானை | = | எவ்யானை |
| அ | + | உயிர் | = | அவ்வுயிர் | அ | + | யானை | = | அவ்யானை |
| இ | + | உயிர் | = | இவ்வுயிர் | இ | + | யானை | = | இவ்யானை |

**167.** அ, இ என்னும் சுட்டெழுத்துக்களின் பின்னும், எகரவினாவெழுத்தின் பின்னும் யகரம் ஒழிந்த மற்ற மெய்கள் வரின் வந்த மெய்யே தோன்றும்.

அ + தந்தை = அத்தந்தை.
அ + நகர் = அந்நகர்.
அ + வீடு = அவ்வீடு.
இ + பகல் = இப்பகல்.
இ + மாது = இம்மாது.
இ + வழி = இவ்வழி.
எ + காலம் = எக்காலம்.
எ + சத்தம் = எச்சத்தம்.
எ + ஞான்று = எஞ்ஞான்று.

**168.** தனி நெடில்மொழியின் பின் வேற்றுமை அல்வழியாகிய இருவழியிலும் க, ச, த, ப மிகும்.

தீ + கொழுந்து = தீக்கொழுந்து.
தீ + பிடித்தது = தீப்பிடித்தது.

**169.** அந்த, இந்த என்னும் சுட்டுத் திரிபின் பின்னும், எந்த என்னும் வினாத் திரிபின் பின்னும் க, ச, த, ப மிகும்.

அந்த + காடு = அந்தக் காடு.
இந்த + பொருள் = இந்தப் பொருள்.
எந்த + செடி = எந்தச் செடி.

**170.** தனிக்குறிலைச் சேர்ந்த மெய்யெழுத்தின் முன் உயிர் வரின் அம்மெய்யெழுத்து இரட்டும்.

சொல் + அழகு = சொல்லழகு.

**171.** இரண்டாம் வேற்றுமை விரியில் க, ச, த, ப மிகும்.

தம்பியை + கண்டான் = தம்பியைக் கண்டான்.
பொருளை + தந்தான் = பொருளைத் தந்தான்.

**172.** மொழியீற்று மகரம் க, ச, த வரின் பெரும்பாலும் அவற்றின் இனவெழுத்தாகத் திரியும்.

மனம் + கலந்தது = மனங்கலந்தது.
மனம் + சுழன்றது = மனஞ்சுழன்றது.
மனம் + திரிந்தது = மனந்திரிந்தது.

# VI. சொற்றொடரியல்

**173**. பெயர் முதலிய சொற்கள் ஒழுங்குபடத் தொடர்ந்து நிற்பது சொற்றொடராம்.

## வாக்கியம்

**174**. முக்கியமாக எழுவாயும், பயனிலையும் சேர்ந்து கருத்து முடியுமாறு நிற்பது வாக்கியமாம்.

அவள் சென்றாள்.
அவன் வேகமாக நடந்தான்.

**175**. சில வாக்கியங்களில் செயப்படுபொருளும் இருக்கும்.

இராமன் காட்டை யடைந்தான்.
பாண்டவர் கௌரவரை வென்றார்கள்.

## எழுவாய்

**176**. வாக்கியம் உண்டாவதற்கு இடமாயிருப்பது எழுவாய். (எழு - வாக்கியம் உண்டாவதற்கு, வாய் - இடம்.)

நாய் ஒருவர் செய்த நன்றியை மறவாது.

இங்கு நாய் என்பது எழுவாய், அதுவே வாக்கியம் உண்டாவதற்குக் காரணம்.

**177**. ஒரு வாக்கியத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய் இருத்தலும் உண்டு.

இராமன், லக்ஷ்மணன், சீதை மூவரும் காட்டிற்குச் சென்றார்கள்.

இதில் மூன்று எழுவாய்களும், ஒரு பயனிலையும் இருக்கின்றன.

**178**. எழுவாய் மறைந்து வருவதும் உண்டு.

பாடசாலைக்குப் போ.

இதில் போ என்பது பயனிலை, இதை 'யார் போவது?' என்று கேட்டால், 'நீ' என்னும் எழுவாய் தோன்றும்; இதற்குத் 'தோன்றா எழுவாய்' என்று பெயர்.

### பயனிலை

**179**. எழுவாய் செய்யும் காரியத்தின் முடிவே பயனிலை (பயன் - எழுவாய் செய்யும் காரியத்தின் பயன், நிலை - நிற்குமிடம்.)

நாய் ஒருவர் செய்த நன்றியை மறவாது.

இதில் நாய் எழுவாய், அதன் காரியம் மறவாமை. அதனால் மறவாது என்பது பயனிலை.

### செயப்படுபொருள்

**180**. எழுவாய் செய்த காரியத்தின் பயனை அடைவது செயப்படுபொருளாம். (செய-எழுவாய் செய்தலை, படுபொருள்-அடையும் பொருள்.

நாய் ஒருவர் செய்த நன்றியை மறவாது.

இதில் நாய் எழுவாய், மறவாது பயனிலை, மறவாமையை அடைவது நன்றி, ஆகையால் நன்றியை என்பது செயப்படுபொருளாம்.

**181**. பயனிலை பெயர்ச் சொல்லாக வருவதும் உண்டு ; அதற்குப் பெயர்ப் பயனிலையென்று பெயர்.

அது நல்ல குதிரை.
இவர் என் உபாத்தியாயர்.

இவ் வாக்கியங்களில் அது எழுவாய், குதிரை பயனிலை. இவர் எழுவாய், உபாத்தியாயர் பயனிலை. குதிரை யென்பதும், உபாத்தியாயர் என்பதும் பெயர்களாக நின்று பயனிலைகளாயின.

**182**. பயனிலை தன் எழுவாயோடு திணை, பால், இடங்களில் இயைந்திருக்கவேண்டும்.

நான் பாடம் படிக்கிறேன்
நீ சட்டம் எழுதுகிறாய்
அவன் பாட்டுப் பாடுகிறான்
அவள் கோலம் போடுகிறாள்
அவர் ஊருக்குப் போகிறார்
அது புல் மேய்கிறது
அவை தண்ணீர் குடிக்கின்றன

## வாக்கிய வகைகள்

**183**. ஓர் எழுவாயும், ஒரு பயனிலையும், ஒரு செயப்படுபொருளும சேர்ந்துவருவது தனிநிலை வாக்கியமாம்.

கோழி கூவிற்று—இது ஓர் எழுவாயும், ஒரு பயனிலையும் சேர்ந்த தனிநிலை வாக்கியம்.

இராமன் இராவணனைக் கொன்றான்—இஃது ஓர் எழுவாயும் ஒரு பயனிலையும் ஒரு செயப்படுபொருளும் சேர்ந்த தனிநிலை வாக்கியம்.

**184**. இரண்டு வாக்கியங்கள் ஒன்றையொன்று தொடர்ந்து நின்றாலும், இரண்டு முதலான எழுவாய்கள் ஒரு பயனிலையை அடைந்தாலும், ஒரே எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டாலும் தொடர்நிலை வாக்கியமாம்.

(1) நான் சொன்னேன் ஆனால் அவன் செய்யவில்லை—இரண்டு வாக்கியங்கள் ஒன்றையொன்று தொடர்ந்தன.

(2) சீதையும், ராமனும் காட்டுக்குச் சென்றார்கள்—இரண்டு எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டன.

(3) கிருஷ்ணன் இங்கிலந்துக்குச் சென்று, இங்கிலீஷ் கற்று, தன் நாட்டை யடைந்தான் — இதில் ஒரே எழுவாய் மூன்று பயனிலைகளைக் கொண்டன.

**185**. ஒரு முதனிலைவாக்கியமும், ஒரு துணைநிலைவாக்கியமும் கலந்தது கலவை வாக்கியமாம். இவ்விரண்டு வாக்கியங்களும் கூடும்போது என, என்று, ஆக முதலிய தனிமொழிகள் இடையிற் கூடும்.

துரியோதனன் கர்ணனைப் பார்த்து, 'நாம் பாண்டவரை எதிர்நின்று வெல்ல முடியாதாகையால், அவர்களை வஞ்சனையால் ஒழிக்கவேண்டும்' என்று கூறினான்.

(1) இதில் துரியோதனன் 'கர்ணனைப் பார்த்து கூறினான்' என்பது முதனிலை வாக்கியம், (2) 'நாம் ஒழிக்கவேண்டும்' என்பது துணைநிலை வாக்கியம், (3) 'என்று' என்பது தனிமொழி.

84968

## ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

### மேரி ராணி வாசக புஸ்தகங்கள்

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| முதல் வகுப்பு ... ... ... | 0 | 2 | 0 |
| இரண்டாம் வகுப்பு ... ... ... | 0 | 2 | 6 |
| மூன்றும் வகுப்பு ... ... ... | 0 | 3 | 0 |
| நான்காம் வகுப்பு ... ... ... | 0 | 4 | 0 |
| ஐந்தாம் வகுப்பு ... ... ... | 0 | 5 | 0 |

### சொற்றொடர் ஆக்கம்

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் ... ... ... | 0 | 2 | 0 |
| இரண்டாம் புத்தகம் ... ... ... | 0 | 3 | 0 |
| மூன்றும் புத்தகம் ... ... ... | 0 | 6 | 0 |

### இலக்கணங்கள்

| | | | |
|---|---|---|---|
| சிற்றிலக்கண வினு விடை — I - 4ஆம் வகுப்பு | 0 | 3 | 0 |
| சிற்றிலக்கணம் — II முதல் பாரத்திற்கு | 0 | 4 | 6 |
| சிற்றிலக்கணம் — III - இரண்டாம் பாரத்திற்கு | 0 | 6 | 0 |
| சிற்றிலக்கணம் — IV - மூன்றும் பாரத்திற்கு | 0 | 8 | 0 |

### மூன்றும் வகுப்பு பூகோளங்கள்

| | | | |
|---|---|---|---|
| சென்னபட்டணம் ஜில்லா ... ... | 0 | 5 | 0 |
| செங்கற்பட்டு ஜில்லா ... ... | 0 | 5 | 0 |
| தென் ஆற்காடு ஜில்லா ... ... | 0 | 5 | 0 |
| கோயமுத்தூர் ஜில்லா ... ... | 0 | 5 | 0 |
| தஞ்சாவூர் ஜில்லா ... ... | 0 | 5 | 0 |
| மதுரை ஜில்லா ... ... | 0 | 5 | 0 |
| இராமநாதபுரம் ஜில்லா ... ... | 0 | 5 | 0 |
| திருநெல்வேலி ஜில்லா ... ... | 0 | 5 | 0 |
| சேலம் ஜில்லா ... ... | 0 | 5 | 0 |
| வட ஆற்காடு ஜில்லா ... ... | 0 | 5 | 0 |


---

Caxton Press, Madras.